மலர்: 03 இதழ்: 01 நவம்பர் 2024 விலை: ₹ 20/-

# பேனா குரல்

PENA KURAL

RNI No.:
TNTAM / 2022 / 85375

தமிழ் மாத இதழ்

www.penakural.com

Scan and visit the website



# தமிழ் நாட்டின்

# செஸ் கிராண்ட் மாஸ்டர்ஸ்



தீப்ஷிகா
ஆட்டோ ஒர்க்ஸ்
அனைத்து இருசக்கர வாகனங்களும் சரிபார்க்கப்படும்
ROYAL ENFIELD
All kind of bike service and care
Engine Re - work
High Quality
MOTUL
Engine Oil
Refill and Maintance
100 % Genuine Parts
used for your bike
Air Filling
Tyre Puncher
Tube & Tube less
Respect Service
PRICE
QUALITY
SERVICE
Deepshika Auto Works
# 3/896, Pillaiyar Kovil Street, Mettukuppam, Chennai - 600097.
9884166636, 7010399368

# பேனா குரல்
## PENA KURAL
தமிழ் மாத இதழ்

RNI No.: TNTAM/2022/85375

ஆண்டு: 03 இதழ்: 01 நவம்பர் 2024

விலை: ₹ 20/- ஆண்டு சந்தா: ₹ 240/-

உரிமையாளர் & அச்சிட்டு வெளியிடுபவர் : N V சிவசங்கர்

ஆசிரியர் : ராதிகா.S, B.E.,

கௌரவ ஆசிரியர் : K.ராமசுப்ரமணியன்

இணை ஆசிரியர் : K.ரமேஷ்குமார்

துணை ஆசிரியர்கள்:
துரை. சந்துரு, ந.மதிவாணன், K.அழகர்சாமி, வீ.அய்யனார், பி.ஸ்டாலின், P.கார்த்திகேயன், B.நாராயணசாமி

தலைமை நிருபர்கள்:
B.நவின்குமார், R.ஹரிகிருஷ்ணன், M.திலிப் குமார், சரவணன் @ மணிகண்டன், K.மாரிதுரை, A.தங்கராஜ்

நிருபர்கள்:
Ba.சரவணன், K.கலைமணி, D.பாமா, அன்புமணி, S.பிரகாசம், இளைய தர்ஷினி, P.அசோக்குமார், J.தனசேகர், தமிழ் வீரன், K.சுபுலட்சுமி, S.ஜெயராஜ்

புகைப்பட நிருபர்கள்:
V.கவியரசன், K.மிதுன் சாய்

சட்ட ஆலோசகர்கள்:
M. குணசீலன், B.Com.,M.L.,
G. சத்தியநாராயணன், B.A., L.L.B.,

இதழ் வடிவமைப்பு:
*Tamilni Printz & Graphics* - 8754582123

நிர்வாக அலுவலகம்:
பேனா குரல்
3/885, பிள்ளையார் கோவில் தெரு,
மேட்டுக்குப்பம், ஓ.எம்.ஆர், சென்னை,
தமிழ் நாடு, இந்தியா - 600097.

தொடர்புக்கு:
044-35906002, 9962245338
info@penakural.com
news@penakural.com
www.penakural.com


பேனா குரல் இதழில் வெளியாகும் பேட்டிகள், கதை, கட்டுரை, விளம்பரங்கள் மற்றும் செய்திகளில் வரும் வாசகங்கள் இதழின் சொந்த கருத்து அல்ல. பேனா குரல் பத்திரிகை சம்பந்தப்பட்ட அனைத்து வழக்குகளும் சென்னையில் உள்ள உரிய நீதிமன்றங்களின் வரம்பிற்கு உட்பட்டது. *

ஆசிரியர் குரல்

# எச்சரிக்கையுடன் இருப்பது அவசியம்!

இந்தியா-சீனா இடையே எல்லைப் பகுதியில் கடந்த 4 ஆண்டுகளாக நிலவி வந்த மோதல் போக்கை முடிவுக்கு கொண்டுவரும் வகையில் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது வரவேற்கத்தக்கதாகும். கடந்த அக். 21 அன்று மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின்படி, கிழக்கு லடாக் எல்லையில் பிரச்னைக்குரிய டெம்சோக், டெப்சாங் சமவெளி பகுதிகளில் இருந்து படைகளை விலக்கிக் கொள்ளும் நடவடிக்கையை இருநாடுகளும் கடந்த அக். 25 அன்று தொடங்கியுள்ளன. இந்தப் பகுதிகளில் இரு நாட்டு ராணுவ வீரர்களாலும் அமைக்கப்பட்டுள்ள கூடாரங்கள் அகற்றப்பட்டு வருகின்றன. ராணுவத் தளவாடங்களையும் பின்புறப் பகுதிகளுக்கு எடுத்துச் செல்லும் பணியையும் இருநாடுகளும் மேற்கொண்டுள்ளன. இந்தப் பணிகள் அக். 29-ஆம் தேதி நிறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதன் பின்னர், மோதலைத் தவிர்ப்பதற்காக அந்தப் பகுதியில் இரு நாட்டு ராணுவ வீரர்களும் இணைந்து கூட்டாக ரோந்துப் பணியில் ஈடுபடுவர்.

கடந்த 2020-ஆம் ஆண்டு ஜூன் மாதம், கிழக்கு லடாக்கில் உள்ள கல்வான் பள்ளத்தாக்கில் எல்லை தாண்டிய சீன வீரர்களை இந்திய ராணுவத்தினர் தடுத்து நிறுத்தினர். அப்போது ஏற்பட்ட மோதலில் இந்தியத் தரப்பில் 20 வீரர்கள் உயிரிழந்தனர். சீனத் தரப்பில் 40 பேர் உயிரிழந்ததாக கூறப்பட்டது.இதன் எதிரொலியாக, எல்லையில் பிரச்னைக்குரிய இடங்களில் இரு நாடுகளும் படைகள், கனரக தளவாடங்களைக் குவித்ததால் பதற்றமான சூழல் உருவானது. இருதரப்பு உறவும் கடுமையாகப் பாதிக்கப்பட்டது.

இருநாட்டு வர்த்தகம் பெரிய அளவில் பாதிக்கப்படாவிட்டாலும், தரவுகள் திருட்டு, தனிநபர் தன்மறைப்பு உரிமை (பிரைவசி) போன்றவற்றுக்காக 300-க்கும் மேற்பட்ட அந்நாட்டு கைப்பேசி செயலிகளுக்கு இந்தியா தடை விதித்துள்ளது. இந்தியாவில் சில சீன நிறுவனங்கள் வர்த்தகத்தில் ஈடுபடவும் தடை விதிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து, எல்லையில் அமைதியை மீட்டெடுக்கும் நோக்கத்தில், ராணுவம், தூதரக அதிகாரிகள் நிலையில் நடைபெற்ற பல சுற்று பேச்சுவார்த்தைகளின் விளைவாக, பாங்காங் ஏரியின் வடக்கு, தெற்கு பகுதிகள், கோக்ரா சாவடி பகுதியில் இருந்து கடந்த 2021-ஆம் ஆண்டில் படைகள் விலக்கிக் கொள்ளப்பட்டன.

எல்லையில் முழுமையான படை விலக்கல், ரோந்துப் பணி தொடர்பாக இரு நாடுகளுக்கும் இடையே முக்கிய ஒப்பந்தம் இப்போது கையொப்பமாகி உள்ளது. இதன் மூலம், கடந்த 2020-ஆம் ஆண்டுக்கு முந்தைய சூழல் தொடர வழிவகை ஏற்பட்டுள்ளது. ரஷியாவின் கசான் நகரில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற பிரிக்ஸ் உச்சி மாநாட்டின்போது பிரதமர் மோடி, சீன அதிபர் ஷி ஜின்பிங் இருதரப்பு பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர். இதில் ரோந்துப் பணி-படை விலக்கல் ஒப்பந்தத்துக்கு ஒப்புதல் வழங்கப்பட்டது.

மேலும் சர்வதேச சட்டங்களை மதிக்காத சீனா எப்போது வேண்டுமானாலும் நம்முடன் ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தத்தை மீறி தன்னிச்சையாக செயல்பட வாய்ப்புள்ளது. எல்லையில் அமைதியை நிலைநாட்டுவது வளர்ச்சிக்கு அவசியம். அதே நேரம், எல்லைப் பகுதியில் சில இடங்களை இழக்காமல் இருக்கும் வகையிலும் எச்சரிக்கையுடன் மத்திய அரசு செயல்பட வேண்டும்.

– ஆசிரியர்

# தமிழ் நாட்டின் செஸ் கிராண்ட் மாஸ்டர்ஸ்



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 11.11.2024 அன்று சென்னை வேளச்சேரியில் நடைபெற்ற சென்னை கிராண்ட் மாஸ்டர்ஸ் 2024 செஸ் போட்டியின் பரிசளிப்பு விழா நிகழ்ச்சியில், மாஸ்டர்ஸ் பிரிவில் வெற்றி பெற்ற அரவிந்த் சிதம்பரம் மற்றும் சேலஞ்சர்ஸ் பிரிவில் வெற்றி பெற்ற வி.பிரணவ் ஆகியோருக்கு கேடயம் மற்றும் பரிக தொகைக்கான காசோலைகளை வழங்கினார். மேலும் இந்நிகழ்ச்சியில் கிராண்ட்மாஸ்டர் டி. குகேஷ் சிங்கப்பூரில் நடைபெறவிருக்கும் உலக செஸ் சாம்பியன்ஷிப் போட்டியில் பங்கேற்க பயிற்சிகள் மேற்கொள்ளவும், தயாராவதற்காகவும் ரூ.10 லட்சத்திற்கான காசோலையை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித்ததாவது:-

இந்தியாவின் முக்கிய கிளாசிக்கல் செஸ் போட்டியான ‘சென்னை கிராண்ட் மாஸ்டர்ஸ் 2024’-ன் பரிசு வழங்கும் விழாவில் இன்று உங்கள் முன் நிற்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன்.

முதலாவதாக, சென்னை கிராண்ட் மாஸ்டர்ஸ் செஸ் போட்டி 2024ல் வெற்றியாளராக உருவானதற்காக தமிழ்நாட்டின் அரவிந்த் சிதம்பரம் அவர்களுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். சேலஞ்சர்ஸ் பிரிவில் பிரணவ் முதல் இடத்தைப் பிடித்ததற்கும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கிராண்ட் மாஸ்டர்ஸ் பிரிவில் முதல் பரிசாக ரூ.15 லட்சமும், சேலஞ்சர்ஸ் பிரிவில் முதல் பரிசாக ரூ.6 லட்சம் வழங்கப்படுகின்றது. இந்த தாராளமான பரிசு நிதியானது. தமிழ்நாட்டில் செஸ் விளையாட்டை ஊக்குவித்து ஆதரிப்பதில் தமிழ்நாடு அரசின் உறுதிப்பாட்டை வெளிப்படுத்துகின்றது.

இந்தப் போட்டியில் பரிசுகளைப் பெற்ற லெவோன். அர்ஜுன், அமீன், மாக்சிம், பர்ஹாம், அலெக்ஸி விதித் சந்தோஷ் குஜ்ராத்தி, முரளி, பிரனேஷ் அபிமன்யு, ஹரிகா வைஷாலி மற்றும் வெற்றி பெற்ற அனைவருக்கும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உங்கள் விளையாட்டு சென்னை கிராண்ட் மாஸ்டர்ஸ் செஸ் போட்டியினை காண பெரும் எண்ணிக்கையிலான ரசிகர்களை ஈர்த்தது. நமது முதலமைச்சர் அவர்கள் மொத்த பரிசு நிதியாக சென்னை கிராண்ட் மாஸ்டர்ஸ் போட்டியில் இரண்டு பிரிவுகளுக்கும் சேர்த்து 70 லட்சம் ரூபாயை வழங்கியுள்ளார்கள்.

கடந்த நவம்பர் 5-ம் தேதி முதல் இன்று வரை, இந்த Chennai Grand Masters Chess Tournament 2024 மிகச்சிறப்பான முறையில் ஏற்பாடு செய்யப்பட்டு நடைபெற்றுள்ளது. அறிவாற்றல்,

கலாச்சாரம் மற்றும் முன்னேற்றத்தின் பூமியான நமது தமிழ்நாட்டை வரையறுக்கும் தொலைநோக்கு, அர்ப்பணிப்பு உணர்வின் பிரதிபலிப்பாகவும் இந்த போட்டி இருந்தது.

இந்த மதிப்புமிக்க போட்டியில் பங்கேற்றுள்ள இந்தியா மற்றும் உலகெங்கிலும் உள்ள அனைத்து வீரர்களுக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உலக அரங்கில் தொடர்ந்து உயர்ந்து வரும் நமது தமிழ்நாட்டின் திறமையாளர் டி.குகேஷ் அவர்களை இந்த தருணத்தில் நாம் அனைவரும் கைத்தட்டி பாராட்டுவோம். சென்னை கிராண்ட் மாஸ்டர்ஸின் 2023 பதிப்பில் குகேஷின் வெற்றி. 2024 கேண்டிடேட்ஸ் போட்டியில் தனது இடத்தைப் பாதுகாக்க உதவியது. SDAT இன் எலைட் விளையாட்டு வீரரான எங்களின் சொந்த கிராண்ட்மாஸ்டர் டி குகேஷ் அவர்கள் சிங்கப்பூரில் நடைபெறவிருக்கும் FIDE உலக செஸ் சாம்பியன்ஷிப்பிற்கான பயிற்சிகளுக்காகவும் மற்றும் தயாராவதற்கும் ரூ.10 லட்சத்திற்கான காசோலையை வழங்குவதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். அந்த போட்டியிலும் குகேஷ் வெற்றி பெற வேண்டும் என்று விரும்புகிறேன்.

எங்கள் முன்முயற்சிகள் எங்களது செஸ் வீரர்களுக்கு உலகத் தரம் வாய்ந்த வசதிகள், பயிற்சி மற்றும் நிதியுதவி

கிடைப்பதை உறுதி செய்துள்ளன. உதாரணமாக, மிஷன் இன்டர்நேஷனல் மெடல்கள் திட்டத்தின் மூலம் (MIMS), பி. இனியன், எஸ் ரோஹித் கிருஷ்ணா மற்றும் செல்வி பி.வி. நந்திதா. போன்ற நம்பிக்கைக்குரிய வீரர்களை ஆதரித்து உதவிகள் செய்வதன் மூலம் உலக அரங்கில் போட்டியிடும் வாய்ப்பினை முதலமைச்சர் அவர்கள் ஏற்படுத்தியுள்ளார். ஏற்கனவே சர்வதேச அளவில் முத்திரை பதித்துள்ள ஷர்வானிகா போன்ற இளம்

திறமையாளர்களுக்குப் பின்னால் நமது மாநிலம் நின்று, 10 வயதுக்குட்பட்ட, இந்தியாவில் அதிக மதிப்பு பெற்ற வீராங்கனையாக அவரை உருவாக்கியது. தமிழ்நாட்டில் 31 கிராண்ட் மாஸ்டர்களை பெற்றுள்ளோம். தொடர்ந்து சாம்பியன்களை வளர்த்து உருவாக்கி வருகின்றோம்.

ஆர். பிரக்ஞானந்தா, ஆர் வைஷாலி போன்ற செஸ் வீரர்களை மாநிலம் உருவாக்கியுள்ளது. சமீபத்தில், புடாபெஸ்டில் நடந்த 45வது செஸ் ஒலிம்பியாட் போட்டியில், இந்திய செஸ் அணிகள் ஆண்கள் மற்றும் பெண்கள் என இரண்டு பிரிவிலும் தங்கம் வென்றது. இந்த வரலாற்றுச் சாதனையில் நமது வீரர்களான குகேஷ், வைஷாலி, பிரக்ஞானந்தா மற்றும் கேப்டன் ஸ்ரீநாத் நாராயணன் ஆகியோர் முக்கியப் பங்காற்றியதில் தமிழ்நாடு பெருமிதம் கொள்கிறது.

அவர்களின் உயர்ந்த திறமைகளை அங்கீகரிக்கும் வகையில் நமது முதலமைச்சர் அவர்கள் மொத்த ஊக்கத்தொகையாக ரூ. 45வது செஸ் ஒலிம்பியாட் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற தமிழக செஸ் வீரர்களுக்கு 90 லட்சம் ரூபாய் வழங்கியுள்ளார்கள்.

எங்களின் அனைத்து வீரர்கள், பயிற்சியாளர்கள் மற்றும் செஸ் அகாடமிகளின் கடின உழைப்பையும் அர்ப்பணிப்பையும் அங்கீகரிக்க இந்த வாய்ப்பைப் பயன்படுத்துகிறேன். இந்த வெற்றியின் மூலம் அரவிந்த் 2,718 புள்ளிகள் என்ற சாதனையை எட்டினார். உலக அளவில் இதுபோன்ற மற்ற போட்டிகளுக்கான அழைப்பிதழ்களைப் பெற இந்த திறன் அவருக்கு உதவும்.

அவரது வெற்றியை தொடர்ந்து எதிர்பார்க்கிறோம்.

மாஸ்டர்ஸ் போட்டியுடன் இணைந்து நடத்தப்பட்ட சென்னை கிராண்ட் மாஸ்டர்ஸ் சேலஞ்சர்ஸ் போட்டியையும் பாராட்ட விரும்புகிறேன். சேலஞ் சர்ஸ் போட்டியின் வெற்றியாளரான பிரணவ், அடுத்த ஆண்டு நடைபெறும் கிராண்ட் மாஸ்டர்ஸ் போட்டியில் பங்கேற்கும் பெருமையைப் பெறுவார்,

முதலமைச்சர் தலைமையிலான தமிழ்நாடு அரசின் விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் (SDAT), செஸ் விளையாட்டிற்கு உண்மையிலேயே தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் தொடர்ந்து ஆதரவளித்து வருகிறது. கடந்த ஆண்டு ரூ.1.77 கோடியாக இருந்த பரிசுத்தொகையானது, இந்த ஆண்டு 2.61 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

இந்தியாவிலும் உலகிலும் செஸ் விளையாட்டில் சிறந்து விளங்கும் மையமாக தமிழ்நாடு இருப்பதை அரசின் ஆதரவு உறுதி செய்கிறது. நமது மாநிலத்தில் தேசிய மற்றும் சர்வதேச போட்டிகளை நடத்துவதில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திற்கும், தமிழ்நாடு அரசுக்கும் இடையறாது ஆதரவளித்து வரும் சதுரங்க வித்தகர் விஸ்வநாதன் ஆனந்த்

அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியை தெரி-வித்துக் கொள்கிறேன். அவரது ஊக்கம்

உண்மையிலேயே விலைமதிப்பற்றது. அதேபோன்று, உலகளாவிய சதுரங்கப் போட்டிகளை இந்தப் பகுதிக்கு கொண்டு வர உதவிய திமிஞ்ஞி க்கு எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இறுதியாக, இந்தப் போட்டியைப் பார்த்து ஆதரவளிக்க முன்வந்த 3,500 பார்வையாளர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். விளையாட்டின் மீதான உங்கள் ஆர்வமும் ஈடுபாடும் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்துகிறது. எங்கள் வீரர்களை புதிய உயரங்களை அடைய ஊக்குவிக்கிறது. மலிவு விலையில் டிக்கெட்டுகள் மற்றும் பல்வேறு செஸ் அகாடமிகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு நேரடி விளையாட்டுகளை பார்த்து அனுபவிக்க இலவச அனுமதி வழங்கப்படுவதால், சதுரங்கத்தில் ஆர்வம் அதிகரித்து வருவதைக் காண்பது மகிழ்ச்சி அளிக்கிறது.

2024 சென்னை கிராண்ட் மாஸ்டர்ஸ் செஸ் போட்டியின் நிறைவின்போது, இந்தப் போட்டி வெளிப்படுத்திய விளையாட்டுத் திறன் போட்டியின் மகிழ்ச்சி மற்றும் அறிவார்ந்த திறமை ஆகியவற்றைக் கொண்டாடுவோம். இன்று நாம் இங்கு கண்ட பல வீரர்கள் சதுரங்க உலகில் இன்னும் பெரிய சாதனைகளை நிகழ்த்துவார்கள் என்பதில் எனக்கு எந்த சந்தேகமும் இல்லை.

மீண்டும் ஒருமுறை, அனைத்து வீரர்களுக்கும் பங்கேற்பாளர்களுக்கும் என்னுடைய வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்த வருடம் உங்களை மீண்டும் சந்திக்க ஆவலுடன் காத்திருக்கின்றோம் என்று தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமை செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப., தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, இ.ஆ.ப., புகழ்பெற்ற செஸ் விளையாட்டு வீரர் விஸ்வநாதன் ஆனந்த் கிராண்ட்மாஸ்டர் டி குகேஷ். மாவட்ட வருவாய் அலுவலர் வி.மணிகண்டன் சென்னை கிராண்ட் மாஸ்டர்ஸ் செஸ் வெற்றியாளர் அரவிந்த் சிதம்பரம். சென்னை கிராண்ட் மாஸ்டர் சேலஞ்சர்ஸ் செஸ் போட்டியில் சேலஞ்சர் பிரிவில் வெற்றி பெற்ற வி பிரணவ், போட்டி இயக்குனர் ஸ்ரீநாத் நாராயணன், நாட்டின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த செஸ் வீரர்கள், செஸ் விளையாட்டு ஆர்வலர்கள், SDAT விடுதி மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

- S.ராதிகா

# கடலூர் பாமக - விசிக பிரச்சினையில் ஸ்டாலின் அரசியல் செய்வதாக அன்புமணி குற்றச்சாட்டு



'கடலூர் பாமக - விசிக மோதல் பிரச்சினையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தண்ணீருக்கு பதிலாக பெட்ரோல் ஊற்றி, அரசியல் செய்ய பார்க்கிறார்.

பாமக - விசிக இடையே சண்டையை மூட்டி விட்டு வேடிக்கை பார்ப்பதை முன்பு கருணாநிதி செய்தார். தற்போது, மு.க.ஸ்டாலின் செய்து வருகிறார்,' என்று பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் குற்றம்சாட்டி உள்ளார்.

ராணிப்பேட்டை மாவட்டம் சோளிங்கரில் பாமக நிர்வாகி இல்லத் திருமண நிகழ்வில் அக்கட்சியின் தலைவர் அன்புமணி ராமதாஸ்07.11.2024 அன்று கலந்துகொண்டார். அப்போது, செய்தியாளர்களிடம் அவர் கூறியது: 'கடலூரில் விடுதலை சிறுத்தைகள் கட்சி மற்றும் பாமக மோதல் விவகாரத்தில், தாக்குதலுக்கு உள்ளான இளைஞர்களுக்கு ஆறுதல் கூற சென்ற பாமக நிர்வாகிகள் மீது வன்கொடுமை தடுப்புச் சட்டம் போடப்பட்டுள்ளது. இது வன்மையாக கண்டிக்கத்தக்கது.

தமிழக காவல் துறை முதல்வர் கட்டுப்பாட்டில் இருக்கும் சூழலில், இந்தச் சம்பவத்தில் முறையாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இதனை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கைகட்டி வேடிக்கை பார்ப்பது தான் திராவிட மாடலா? இதுதான் முதல்வரின் நிர்வாக லட்சணமா? இதுதான் சட்டம் - ஒழுங்கை நிலைநாட்டுவதா? தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் இந்த பிரச்சினையில் தண்ணீருக்கு பதிலாக பெட்ரோல் ஊற்றி, விசிக - பாமக மோதலை வைத்து அரசியல் செய்ய பார்க்கிறார். பாமக - விசிக இடையே சண்டையை மூட்டி விட்டு வேடிக்கை பார்ப்பதை முன்பு கருணாநிதி செய்தார். தற்போது, மு.க.ஸ்டாலின் செய்து வருகிறார்.

தமிழக காவல் துறையும், மோதலுக்கு காரணமானவர்களை விட்டு விட்டு, பாமக நிர்வாகிகள் மீது வன்கொடுமை சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்துள்ளது. இதுதான் காவல் துறையின் லட்சணமா? காவல் துறை தன் கடமையை சரியாக செய்ய வேண்டும். இது இப்படியே சென்றால் பாமக வேடிக்கை பார்க்காது. மிகப் பெரிய அளவில் போராட்டத்தை நடத்துவோம்.

ராணிப்பேட்டை மாவட்டம் புதிய மாவட்டமாக உருவான பிறகு எந்த விதமான வளர்ச்சி இங்கு இல்லை. இங்கு மருத்துவக் கல்லூரி மற்றும் அதற்கு தேவையான கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி தர வேண்டும். சோளிங்கரில் புறவழிச்சாலையை கொண்டு வர வேண்டும் என நீண்ட நாட்களாக கோரிக்கைவிடுத்து வருகிறோம்.

பாலாற்றில் தடுப்பணை கட்ட வேண்டும். இதை நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகனிடம் பலமுறை கூறிவிட்டோம். ஆனால், நடவடிக்கை தான் இல்லை. பனப்பாக்கம் பகுதியில் சிப்காட் தொழிற்சாலை வந்தால் 80 சதவீதம் வேலை வாய்ப்பு உள்ளூர் இளைஞர்களுக்கு வழங்க வேண்டும். ஒசூரில் இது போல சிப்காட் தொழிற்சாலை கொண்டு வரப்பட்டு அங்கு ஜார்கண்ட் மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் தான் வேலை வாய்ப்பு வழங்கினர்.



அந்தநிலை இங்கு வரக்கூடாது. தமிழகத்தில் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த வேண்டும்.

தெலங்கானாவில் 30 நாட்களில் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தும்போது, தமிழகத்தில் நடத்த முடியாதா? சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த முதல்வர் மு.க.ஸ்டாலின் ஏன் பயப்படுகிறார் என தெரியவில்லை. கேட்டால் மத்திய அரசு அனுமதிக்க வேண்டும் எனக்கூறுகிறார்கள். மத்திய அரசு அனுமதி வழங்க வேண்டுமென்றால் ஏன் நீங்கள் ஆட்சியில் இருக்கிறீர்கள்? நிர்வாக திறமை இல்லையா?

தமிழகத்தில் கஞ்சா விற்பனை அதிகரித்துள்ளது. காவல் துறையினர் ஒத்துழைப்புடன் தமிழகத்தில் கஞ்சா மற்றும் போதைப்பொருள் விற்பனை அதிகரித்துள்ளது. போதை பொருள் விவகாரத்தில் தமிழக முதல்வர் தனி கவனம் செலுத்த வேண்டும். வெறும் கண்துடைப்புக்காக மட்டும் அல்லாமல் போதை பொருட்களை ஒழிக்க தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்,' என்று அவர் கூறினார். அப்போது, முன்னாள் மத்திய இணையமைச்சர் என்.டி.சண்முகம் மற்றும் பாமக நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.

- துரை. சந்துரு

# தமிழக காவல்துறையைச் சேர்ந்த 8 பேருக்கு மத்திய அரசின் சிறப்பு விருது அறிவிப்பு

தமிழக காவல்துறையைச் சேர்ந்த 8 பேர் உள்பட 463 பேருக்கு 2024 ஆம் ஆண்டிற்கான மத்திய உள்துறை அமைச்சகத்தின் 'திறன் பதக்க' விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2018 முதல் பல்வேறு மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களில் காவல் துறை, மத்திய பாதுகாப்பு அமைப்புகள், மத்திய,மாநில தடய அறிவியல், புலனாய்வு பிரிவு ஆகியவற்றில் சிறப்பு நடவடிக்கை, புலனாய்வு, நுண்ணறிவு, தடய அறிவியல் ஆகிய நான்கு பிரிவுகளில் சிறப்பாக பணியாற்றும் அதிகாரிகளுக்கு 'மத்திய உள்துறை அமைச்சகம் பதங்களை வழங்கி கௌரவித்து வருகிறது.

இந்து விருது சிறந்த பணியை அங்கீகரிப் பதற்கும்,உயர்தொழில்முறை தரங்களை மேம்படுத்து வதற்கும், சம்பந்தப்பட்ட அலுவலர், அதிகாரிகளின் மன உறுதியை ஊக்குவிக்கும் வகையில் வழங்கப் படுகிறது. அதன்படி, ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 31 ஆம் தேதி, அதாவது சர்தார் வல்லபாய் படேலின் பிறந்த நாளன்று இந்த பதக்கம் அறிவிக்கப் பட்டு வருகிறது.

இந்த நிலையில் 2024 ஆம் ஆண்டுக்கான இந்த விருது தமிழக காவல்துறையைச் சேர்ந்த 8 பேர்




உள்பட பல்வேறு மாநிலங்களின் காவல்துறை, மத்திய ஆயுதக் காவல் படை (சிஏபிஎஃப்), மத்திய காவல் அமைப்பு (சிபிஓ) ஆகியவற்றின் 463 பேருக்கு விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு வெளியிடப்பட்டுள்ள அறி-விப்பின்படி, தமிழக காவல்துறையைச் சேர்ந்த 8 பேர் உள்பட 463 பேருக்கு 2024 ஆம் ஆண்டிற்கான மத்திய உள்துறை அமைச்சகத்தின் 'திறன் பதக்க' விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழக புலனாய்வுப் பிரிவில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள் வந்திதா பாண்டே, கே. மீனா,காவல் ஆய்வாளர்கள் எம். அம்பிகா, என். உதயகுமார், எஸ். பாலகிருஷ்ணன், ஏசிபி சி.கார்த்திகேயன், சி.நல்லசிவம் மற்றும் தடயஅறி-வியல் பிரிவு துணை இயக்குநர் சுரேஷ் நந்தகோபால் என 8 பேர் 'மத்திய உள்துறை அமைச்சகத்தின் 'திறன் பதக்க' விருதை பெறுகின்றனர்.

- A.தங்கராஜ்



# மழையால் நனைந்த குறுவை நெல்!

## காய வைக்க இடமில்லாமல் தவிக்கும் விவசாயிகள்

தஞ்சை மாவட்டத்தில் தற்போது பரவலாக பெய்து வரும் மழை மற்றும் இரவு நேரத்தில் பனிப்பொழிவு ஆகியவற்றால் அறுவடை செய்த நெல்லில் ஈரப்பதம் அதிகமாக உள்ளது.

எனவே 22 சதவீதம் வரை ஈரப்பதம் உள்ள நெல்லை கொள்முதல் செய்ய வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் பம்ப்செட் வாயிலாக நெல் சாகுபடி மேற்கொள்ளப்பட்டு அறுவடை நடந்து வருகிது. இந்த நெல்மணிகள் தற்போது பரவலாக பெய்து வரும் மழை மற்றும் பனிப்பொழிவால் ஈரப்பதம் அதிகமாக உள்ளது. இதனால் சாலையோரத்தில் குறுவை நெல்லை காயவைக்கும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர். எனவே 22 சதவீதம் ஈரப்பதம் வரை கொள்முதல் செய்ய வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தமிழகத்தின் நெற்களஞ்சியமாக தஞ்சை மாவட்டம் விளங்கி வருகிறது. இங்கு குறுவை, சம்பா, தாளடி என 3 போகம் நெல்சாகுபடி நடைபெறுவது வழக்கம். இதற்காக ஒவ்வொரு ஆண்டும் மேட்டூர் அணையில் இருந்து ஜூன் மாதம் 12ம் தேதி தண்ணீர் திறந்துவிடப்படும். அதன்படி குறிப்பிட்ட தேதியில் தண்ணீர் திறந்தால் குறுவை சாகுபடி பரப்பளவு அதிகரித்து சம்பா சாகுபடி பரப்பளவு குறைந்து காணப்படும்.

இந்த ஆண்டு தஞ்சாவூர் மாவட்டத்தில் சுமார் 3.5 லட்சம் ஏக்கரில் குறுவை சாகுபடி நடந்துள்ளது. இலக்கை தாண்டி சாகுபடி செய்திருந்தாலும் பூச்சி தாக்குதல் உள்ளிட்டவற்றால் நெற்பயிர்கள் பாதித்தன. இருந்தாலும் பூச்சிக்கொல்லி மருந்து தெளித்து அதனை அறுவடைக்கு தயார்படுத்தினர். கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு கூடுதல் பரப்பில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இதையடுத்து சம்பா, தாளடி சாகுபடி அதிக அளவில் நடைபெறும் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறக்க தாமதம் ஆனதால் ஒரு சில இடங்களில் தற்போதும் சம்பா சாகுபடிக்கான பணிகள் நடந்து வருகிறது. பாய் நாற்றங்கால், நாற்று நடுதல்

உள்ளிட்ட பணிகளை விவசாயிகள் மும்முரமாக மேற்கொண்டு வருகின்றனர்.

இதற்கிடையில் பம்ப்செட் வாயிலாக தஞ்சாவூர் மாவட்டம் வல்லம், திருக்காட்டுப்பள்ளி, பூதலூர், ஒரத்தநாடு, பாபநாசம், அம்மாபேட்டை உள்ளிட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட குறுவை நெல் அறுவடை பணிகள் நடந்து வருகிறது. தஞ்சாவூர் மாவட்டத்தில் தற்போது 95 சதவீதம் வரை அறுவடை பணிகள் நடந்துள்ளன. அறுவடை செய்த நெல்லை விவசாயிகளிடம் கொள்முதல் செய்வதற்காக கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளது. இதனால் விவசாயிகள் அறுவடை செய்த நெல்லை கொள்முதல் நிலையங்களில் விற்பனை செய்து வருகின்றனர்.

இந்த நிலையில் கடந்த சில நாட்களாக மாவட்டம் முழுவதும் அவ்வப்போது பெய்த மழையால் அறுவடை செய்த நெல்மணிகள் மழையில் நனைந்து வீணாகி வருகின்றன. அவற்றை உலர்த்த கொள்முதல் நிலையங்களில் உலர் களம் இல்லாததால் கிராம புறத்தில் உள்ள சாலைகளில் கொட்டி நெல்மணிகளை விவசாயிகள் காய வைக்கின்றனர். அதே போல் ராராமுத்திரகோட்டை, சாலியமங்கலம், பூண்டி உள்ளிட்ட பகுதிகளில் அறுவடை செய்த நெல்களை சாலையில் கொட்டி காயவைக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதுகுறித்து விவசாயிகள் தரப்பில் கூறுகையில், எங்கள் பகுதியில் அறுவடை செய்த நெல்மணிகளை காய வைக்க போதிய இடம் இல்லாமல் கொள்முதல் நிலையம் அருகே காயவைக்க வந்துள்ளோம். இது தேசிய நெடுஞ்சாலையாக உள்ளதால் நெல்லை காயவைக்க கூடாது என்று அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். தற்போது கொள்முதல் நிலையங்களில் 17 சதவீதம் ஈரப்பதம் வரை கொள்முதல் செய்யப்படுகிறது. அடிக்கடி பெய்து வரும் மழையால் நெல்மணிகளில் ஈரப்பதம் அதிகரித்துள்ளது. குறைந்த நேரம் மட்டுமே காயவைக்க முடிகிறது. பகலில் காயவைத்தாலும் இரவில் பனிப்பொழிவால் மீண்டும் ஈரப்பதம் ஆகிறது.

எனவே 22 சதவீதம் வரை ஈரப்பதம் உள்ள நெல்மணிகளை கொள்முதல் செய்ய வேண்டும். மேலும் நெல் கொள்முதல் நிலையங்களில் உலர்களம் அமைக்க வேண்டும். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர். – ந.மதிவாணன்

# பள்ளிகளில் மாணவிகளுக்கு 97.5 சதவீதம் தனி கழிப்பறை வசதி: கோர்ட்டில் மத்திய அரசு தகவல்

அரசு, அரசு உதவி பெறும் மற்றும் தனியார் பள்ளிகள் உட்பட நாட்டில் உள்ள 97.5 சதவீத பள்ளிகளில் மாணவிகளுக்கு தனி கழிப்பறை வசதி செய்யப்பட்டுள்ளதாக உச்ச நீதிமன்றத்தில் மத்திய அரசு தெரிவித்துள்ளது.

6 முதல் 12ம் வகுப்பு படிக்கும் மாணவிகளுக்கு இலவச சானிட்டரி நாப்கின் வழங்கவும், அனைத்து அரசு மற்றும் அரசு-உதவிபெறும் பள்ளிகளில் பெண்களுக்கு தனி கழிப்பறை வசதிகளை உறுதி செய்யவும் மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு உத்தரவிடக் கோரி காங்கிரஸ் தலைவரும் சமூக ஆர்வலருமான ஜெயா தாக்கூர் தாக்கல் செய்த பொதுநல வழக்கு நிலுவையில் உள்ளது.

இவ்வழக்கு விசாரணையில் மத்திய அரசு கூறியதாவது:டில்லி, கோவா, புதுச்சேரி போன்ற மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் 100 சதவீத இலக்கை எட்டியுள்ளன.மேலும், 10 லட்சத்துக்கும் மேற்பட்ட அரசுப் பள்ளிகளில் மாணவர்களுக்கு 16 லட்சம் கழிப்பறைகளும், மாணவியருக்கு 17.5 லட்சம் கழிப்பறைகளும், அரசு உதவி பெறும் பள்ளிகளில் மாணவர்களுக்கு 2.5 லட்சம் கழிப்பறைகளும், மாணவியருக்கு 2.9 லட்சம் கழிப்பறைகளும் கட்டப்பட்டுள்ளது.

மேற்கு வங்கத்தில் 99.9 சதவீதம், உத்தரபிரதேசத்தில் 98.8 சதவீதம், தமிழகத்தில் 99.7 சதவீதம், கேரளாவில் 99.6 சதவீதம், சிக்கிம், குஜராத், பஞ்சாபில் 99.5 சதவீதம், சத்தீஸ்கரில் 99.6 சதவீதம், கர்நாடகாவில் 98.7 சதவீதம், மத்திய பிரதேசத்தில் 98.6 சதவீதம், மகாராஷ்டிராவில் 97.8 சதவீதம் , ராஜஸ்தானில் 98 சதவீதம், பீகாரில் 98.5 சதவீதம், ஒடிசாவில் 96.1 சதவீதம், காஷ்மீரில் 89.2 சதவீத பள்ளிகளில் மாணவிகளுக்கு தனி கழிப்பறை வசதி செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு மத்திய அரசு தெரி–வித்துள்ளது. – B.நாராயணசாமி

# பிரதோஷ காலத்தில் சிவனின் 11 பெயர்களை உச்சரித்து வழிபாட்டால் பாவம் விலகும்

அனைத்து சிவாலயங்களிலும் பக்தர்களின் தோஷத்தை நிவர்த்தி செய்து வைக்கும், மிகப் பெரும் தோஷ நிவர்த்தி பூஜையாக கொண்டாடப்படுவது பிரதோஷ பூஜையாகும். இந்த தினத்தில் சிவபெருமான் குறிப்பிட்ட காலத்தில் மக்களின் ஒருசில செய்கையால் விளைந்த பாவங்களை போக்கி அருளுகிறார்.

அந்த புனித வேளையில் மக்கள் சிவனை வழிபட பல்வேறு வழிமுறைகள் உள்ளன. அந்த வழிமுறைகளில் ஒன்றுதான் சிவனின் முக்கிய 11 பெயர்களால் அவரை வணங்கும் சிவ வழி பாடாகும்.

1. பவன், 2. ருத்திரன், 3. மிருடன், 4. ஈசானன், 5.தாணு, 6. சம்பு, 7. சருவன், 8. உக்கிரன், 9. பர்க்கன், 10. பரமேஸ்வரன், 11.மகாதேவன் ஆகிய திருநாமங்களில் சிவனை பிரதோஷ தினத்தில் துதித்து வழிபட்டால் மிக அற்புதமான பலன்களை பெறலாம். மேற்கண்ட ஒவ்வொரு பெயருக்கும் உள்ள சிறப்பை பார்ப்போம்.

**1. பவன்:**

பிரதோஷ காலத்தில் சிவனை வேண்டிக் கொள்ளும் போது பவனே என்னைக் காப்பாற்று என்று வேண்டிக் கொள்ளுதல் வேண்டும். எல்லாவற்றையும் தன்னிடமிருந்து தோற்றுவிப்பவன் சிவனே. இதுவே பவன் என்ற பெயரின் பொருளாகும். ஒரு குருவை சீடன் இதற்கு விளக்கம் கேட்டான். தங்கம், வெள்ளி, முத்து, பவளம், வைரம், ரத்தினம், நீலம், புஷ்பராகம், வைடூரியம் இவைகள் எங்கே கிடைக்கின்றன? என்று குரு கேட்டார். அதற்கு அந்த சீடன் பூமியில்தான் என்றான். நீர், நிலம், காற்று, நெருப்பு, ஆகாயம் எங்கே தோன்றுகிறது? பிறப்பு, மரணம் எங்கே நடைபெறுகிறது? என்று குரு கேட்டார். அதற்கு அந்த சீடன் எல்லாம் பவனே அனைத்தும் அங்கிருந்தே வருகறது என்றான். ஆகவே பிரதோஷ தினத்தில் பவனை வணங்கினால் பாவம் தொலைந்து நல்லது நடக்கும்.

**2. ருத்ரன்:**

இது சிவபெருமானின் இரண் டாவது பெயராகும். ருத்ரன் என்ற பெயர் மிகவும் சிறப்பானதாகும். பிரதோஷ காலத்தில் பக்தர்கள் ருத்ரனின் பெயரைச் சொல்லி வணங்க வேண்ம். பிறப்பு ஒரு நோய் என்றார் தத்தாத்ரேயர், பிறந்த பின்பும் உடம்புக்கு நோய் வருகிறது. பந்தம், பாசம், இவைகளால் மனிதன் ஆண்டவனை மறக்கிறான். அதனால் பந்த



பாசம் ஒரு நோயே என்றார் தத்தாத்ரேயர். கோபம், பொறாமை, காமம் அனைவரையும் வாட்டுகின்ற ஒரு பெரிய நோய். இதனால் பிறப்பு இறப்பு நோய்களை போக்கும் சக்தி ருத்ரனுக்கு உண்டு. பிரதோஷ காலத்தில் ருத்திரனை வழிபட்டால் குற்றங்கள் எல்லாம் மனித சிந்தனையிலிருந்து மறையும்.

**3. மிருடன்:**

இது சிவபெருமானின் மூன்றா வது சிறப்பு பெயராகும். எல்லோரையும் சுகம் அடையச் செய்து உரிய இடத்தில் சேரும்படிச் செய்பவன் சிவபெருமானே இதுவே மிருடன் என்ற பெயரின் பொருளாகும். பிரதோஷ காலத் தில் பக்தர்கள் மிருடனே சுகம் கொடு என்று கேட்டால் துன்பத்தைப் போக்கி விடுவான் இதுவே மிருடன் தரும் பலன் ஆகும்.

**4. ஈசானன்:**

சிவபெருமானின் நான்காவது தோற்றம் ஈசானன். ஆங்கிலத்தில் கார்னர் என்றால் மூலை என்று பெயர். எந்த இடத்தில் அமர்ந்து கொண்டால் நீ புகழ் அடைவாய் என்று யோசி அந்த இடத்தில் சென்று அமர்ந்து கொள் அதுவே ஈசான்ய மூலை ஆகிவிடும் என்கிறார் சிவன். சிவலிங்கங்கள் இருக்கின்ற இடங்களெல்லாம் ஈசான்ய மூலைகளே. கடவுள் எல்லா இடங்களிலும் வைத்து மனிதன் புகழ் கொடி நாட்ட வேண்டும். இதுவே இதன் கருத்தாகும். சிவனை வழிபட்டு இதை அடையுங்கள் தனக்கு மேற்

பட்டோர் ஒருவரும் இல்லாதவன் இதுவே ஈசானன் என்ற சொல்லின் கருத்தாகும்.

**5.தாணு:**

இது சிவபெருமானின் ஐந்தாவது பெயர். சிறிது அசைவின்றி நிலை பெற்றிருப்பவன் தாணு என்ற பெயரின் பொருள் இதுவே தாணுலிங்கம் என்றும் சிவதாணு என்றும் சிவனுக்குப் பெயருண்டு பக்தியுடன் சிவனை ஓரிடத்தில் வைத்தாலும், பக்தியின்றி சிவனை ஓரிடத்தில் வைத்தாலும் கடவுள் அங்கேயே நிலைத்து விடுவார். அவனை அசைக்க முடியாது. பக்தர்களே, பிரதோஷகாலத்தில் நீங்களும் தாணுலிங்கத்தை வழிபட்டு வெற்றி பெறுங்கள்.

**6. சம்பு:**

சம்பு சிவபெருமானின் ஆறாவது திருஉருவமாகும். இப்பெயர் ஞான மூர்த்தியாக விளங்கிய முருகனுக்கு ஒரு தனிச் சிறப்பினைத் தந்தது. சம்பு என்ற கடவுள் உயர்வு அடைவதற்குத் தேவையான பொருளை அனைவருக்கும் உடனே தருவார். அதனால் சிவனுக்கு சம்புப் பிரசாத் என்றும் பெயருண்டு. சம்பு மகாதேவன் என்பது சம்போ மகாதேவா என்று ஆகியது. சம்போ மகாதேவா என்று ஒரு முறை கூவ அழைத்தால் விவபெருமான் மனிதனுக்கு எல்லாத் துறைகளிலும் உடனே உயர்வினை தருவார்.

**7. சருவன்:**

சருவன் என்பது சிவபெருமா னின் ஏழாவது பெயராகும். இப்பெயரைச் சொல்லி இத்திருவுருவத்தைப் பிரதோஷ வேளையில் வழிபட வேண்டும். வழிபட்டால் உலகத்திற்கு மிகப் பெரிய நன்மை விளையும். சருவன் என்றால் கொடியவர்களைத் தண்டித்துக் கொள்பவன் என்று பொருள். மிக கொடியவர்களை சிவபெருமான் தண்டித்து மக்களை காக்கிறார்.

**8. உக்கிரன்:**

இது சிவபெருமானின் பதினொரு திருஉருவங்களில் எட்டாவது உருவத்தின் பெயராகும். எண் தோள் வீசி ஆடும் சிவபெருமானின் பதினொரு திருஉருவங்களுக்கு ஏகாதச ருத்திரங்கள் என்று பெயர். உக்கிரன் என்றால் எதிலும் நின்று ஆட்சி செய்பவன் என்று பெயர் ஆட்சியாளன் என்று பெயருண்டு. இவ்வுக்கிரன் பூஜை செய்தவுடன் உடனே மகிழ்வார். அதேபோல் தவறு செய்தவுடன் உடனே கோபிப்பான்.

**9. பர்க்கன்:**

பர்க்கன் இது சிவபெருமானின் ஒன்பதாவது அவதாரம் அப்பொழுது ஒரு சிறப்பான உருவம் அவருக்குக் கிடைக்கிறது உலகில் எல்லா துறைகளிலும் தகராறுகள் வரும். தவறுகள் வரும். தவறு இழைப்பதனால் இவைகள் வருவதில்லை. அனைத்துமே அறியாமையினால் நிகழ்கின்றன. அறியாமையைப் போக்கி எல்லா உயிர்களையும், அறிவு உள்ளவர்களாய் ஆக்குவதே பர்க்கன் என்ற கடவுளின் வேலையாகும்.

**10. பரமேஸ்வரன்:**

படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்து தொழில்களையும் ஒரே சமயத்தில் செய்கின்ற சிவபெருமானுக்கு பரமேஸ்வரன் என்று பெயர். இது இறைவனுக்குக் கிடைத்த பத்தாவது திருநாமமாகும். இச்சமயத்தில் இறைவன் முழு மகிழ்ச்சி அடைந்து கூத்தாடினான். அப்பொழுதே அவனுக்கு நடராஜன் என்ற காரணப் பெயர் ஏற்பட்டது.

இவனது திருக்கோயில் சிதம்பரம். பிரதோஷ கால பூஜையில் ஒருநாள் அனைவரும் நடராஜனை வழிபடுதல் வேண்டும். பரமேஸ்வரன் சிந்தனை உள்ளவர்களே நாட்டியம் ஆடுவார்கள். பற்பல அபிநயங்களைப் பிடித்துக் காட்டுவார்கள் நடராஜனின் உருவம் இதுவே என்பதை அறியுங்கள். சிவன் கோயிலில் இருக்கின்ற மற்ற உருவங்கள் எல்லாம் பூஜை செய்து வழிபடும் உருவங்கள். அங்கு நடராஜப் பெருமான் ஒருவனே நித்திய தரிசனத்திற்குரிய கடவுள். காரணம் நூற்றுக்கு நூறு தொழிலில், வேலையில் வல்லவர்களே நாடு தரிசிக்க விரும்பும்.

**11. மகாதேவன்:**

சிவபெருமானுக்கு ஒரு ஒளிமயமான திருவுருவம் திடீரென்று ஏற்பட்டது. இது பக்தர்களுக்காகத் தோன்றிய ஒரு அற்புதத் தோற்றம் ஆகும். இது இறைவனின் பதினொன்றாம் பெயராகும். எல்லையில்லாத பேரொளியுடன் அமர்ந்து இருந்தார் சிவபெருமான் இதுவே மகாதேவன் என்ற பெயரின் பொருள். ஹர ஹர மகாதேவா என்றால் எத்திசையிலும் இப்பேரொளி எல்லையில்லாமல் இருக்கும். தற்காகவே மகாதேவன் தோன்றினார். ஒளிக்கு பின் பக்தன் விரும்பினால் தனது உருவத்தையும் காட்டுவார். சிவபெருமானிடம் இருட்டைக் காண முடியாது.

பிரதோஷ பூஜையின் போது சிவபெருமான் பதினொரு வடிவங்களை எடுக்கிறார். பிரதோஷ பூஜையின்போது மேற்கண்ட பதினொரு வடிவங்களையும் நாம் நினைத்து வழிபட்டால் நம்முடைய பாவங்கள் விலகி சிவபெருமானின் அருள் கிடைத்து வாழ்க்கையில் முன்னேற முடியும் என்பது நிதர்சனமான உண்மை.

– K.சுபுலட்சுமி



# குளத்தில் தாமரை மலர்ந்ததுக்கே இப்படியா?

## சீக்கிரம் அலறப் போறீங்க: தமிழிசை

ஆய்வின் போது கிண்டல் செய்த அமைச்சர் சேகர்பாபுவுக்கு தமிழிசை சௌந்தரராஜன் பதில் கொடுத்துள்ளார்.

“குளத்தில் தாமரை மலர்வதைக் கண்டே அலறுகிறீர்களே... வருங்காலத்தில் ஒவ்வொரு குடும்பத்திலும் தாமரை மலரத்தான் போகிறது.. அதைக் கண்டு நீங்கள் அலறத்தான் போகிறீர்கள்.” எனக் கூறியுள்ளார் தமிழிசை சௌந்தரராஜன்.

சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் போரூரில் 16.60 ஏக்கர் பரப்பளவில் ரூ.12.60 கோடி மதிப்பில் ஈரநிலை பசுமை பூங்கா அமைக்கப்பட்டு வருகிறது. இந்த பூங்காவில் திறந்தவெளி உடற்பயிற்சி மைதானம், சிறுவர் விளையாட்டுத் திடல் உள்ளிட்ட பல்வேறு வசதிகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

பசுமை பூங்காவில் பல்வேறு வசதிகள் அமைக்கும் பணிகளை இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். அப்போது அதிகாரிகளிடம் இந்த பணிகள் குறித்து கேட்டறிந்தார்.

அப்போது அங்கு குளத்தில் மலர்ந்திருந்த தாமரைப் பூக்களை பார்த்த அமைச்சர் சேகர்பாபு, அதிகாரிகளிடம், “தாமரை வளவே கூடாது.. இங்க என்ன இப்படி வளர்ந்திருக்கு” என கிண்டலாக கூறினார். இதனால் அங்கு கலகலப்பான சூழல் ஏற்பட்டது.

அமைச்சர் சேகர்பாபு, “தாமரை வளரவே கூடாது” என அதிகாரிகளிடம் கிண்டலாக கூறிய வீடியோ சமூக வலைதளங்களில் வைரலானது. இந்நிலையில் அமைச்சர் சேகர்பாபுவுக்கு முன்னாள் ஆளுநரும், பாஜக மூத்த நிர்வாகியுமான தமிழிசை சௌந்தரராஜன் பதிலடி கொடுத்துள்ளார்.

தமிழிசை சௌந்தரராஜன் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில், “அரசு அமைக்கும் பூங்காவில்.. குளத்தில்



கூட தாமரை வளரக்கூடாது.. என ஆவேசப்பட்டு இருக்கிறார் தமிழக அறநிலையத்துறை அமைச்சர் அண்ணன் சேகர் பாபு அவர்கள்... குளத்தில் தாமரை மலர்வதைக் கண்டே அலறுகிறீர்களே... வருங்காலத்தில் ஒவ்வொரு குடும்பத்திலும் தாமரை மலரத்தான் போகிறது.. அதைக் கண்டு நீங்கள் அலறத்தான் போகிறீர்கள்.

அரசு அமைக்கும் பூங்காவிலேயே தாமரை வேண்டாம் என ஆவேசப்படும் நீங்கள்.. தாமரை அரசமைக்கும் காலத்தையும் பார்க்கத்தான் போகிறீர்கள்.... நீங்கள் காலம் காலமாக கூவத்தை சுத்தம் செய்வோம் என மக்களை ஏமாற்றுவதை மாற்றி கூவத்தையும் சுத்தப்படுத்தி அங்கேயும் தாமரை மலர மலர் முகத்துடன் மக்கள் காணத்தான் போகிறார்கள்... இது வெறும் சத்தமல்ல சத்தியம். சாத்தியம்... லட்சியப் பற்றுள்ள தொண்டர்களாலும் லட்சக்கணக்கில் சேர்ந்த புதிய உறுப்பினர்களாலும் இது சாத்தியம் என்பது சத்தியம்“ எனத் தெரி-வித்துள்ளார்.

- M.திலிப் குமார்

# எத்தனை காலம்தான் ஏமாறுவார் இந்த நாட்டிலே..!




திருப்பத்தூர் மாவட்டம் நாட்றம்பள்ளி அடுத்த நாயனச்செருவு பகுதியில் வசிக்கும் சுபாஷ் மற்றும் பூபதி ஆகியோர் கடந்த சில மாதங்களுக்கு முன்பு நியூசிலாந்து நாட்டிற்கு வேலைக்கு அனுப்புவதாகக் கூறி நாட்றம்பள்ளி சுற்றுவட்டார பகுதிகளில் உள்ள இளைஞர்களிடம் ஒன்றரை லட்சம் முதல் 4 லட்சம் வரை பணம் வாங்கிக் கொண்டு பல மாதங்களாக வெளிநாட்டுக்கு அனுப்பாமல் காலம் தாழ்த்தி வந்துள்ளார்.

இந்நிலையில் சம்பந்தப்பட்ட கிராமத்தில் பணம் கட்டி ஏமாந்த இளைஞர்கள் 50-க்கும் மேற்பட்டோர் தங்களது உறவினர்களுடன் கடந்த நவம்பர் 25 திங்கட்கிழமை அன்று ஒன்று கூடி பூபதி என்பவரிடம் தங்களது பணத்தை திருப்பி கொடுக்குமாறு வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இதனால் இப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

தகவலறிந்த விரைந்து வந்த திம்மாம்பேட்டை காவல் உதவி ஆய்வாளர் ரூகன் தலைமையிலான போலீசார் கூடியிருந்த இளைஞர்களிடம் விசாரணை நடத்தினர். அதனைத் தொடர்ந்து போலீசார் பாதிக்கப்பட்ட இளைஞர்களிடம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் புகார் அளிக்குமாறு அறிவுரை வழங்கினர்.



பாதிக்கப்பட்டவர்கள் கூறும்போது தாங்கள் மூன்று வட்டிக்கு கடன் வாங்கி இப்பணத்தை கட்டியதாகவும் பணம் கொடுத்தவர்கள் தங்களை திருப்பி கொடுக்க வேண்டி தொல்லை தருவதால், நாங்கள் மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளாகி உள்ளதாகவும் வேதனையுடன் தெரிவித்தனர்.

இதுபற்றி சமூக ஆர்வலர்கள் சிலர் கூறும்போது:- பணம் கட்டுவதற்கு முன்பு சம்பந்தப்பட்ட நபர்கள் உரிய அனுமதி பெற்று நிறுவனம் நடத்தி வருகின்றனரா என்று விசாரித்து பணம் கட்ட வேண்டும் என்று கூறினர்.

- S.மோகன்

# தமிழ்நாட்டில் ஜாமீன் கிடைத்தும்கூட வெளிவர முடியாமல் தவிக்கும் 175 கைதிகள் பின்னணி என்ன?

சிறைத்துறையின் நடைமுறைகளை முடித்து விட்டு சிவகங்கையை சேர்ந்த 41 வயதான அந்தப் பெண், 11 ஆண்டுகளுக்குப் பிறகு சிறையை விட்டு வெளியே வந்தார். இரண்டு வயது மகளைக் கொன்றதாக பதிவான வழக்கில், கோவை நீதிமன்றம் 2013 ஆம் ஆண்டு அவருக்கு ஆயுள் தண்டனை விதித்தது. கடந்த ஆண்டு டிசம்பர் 20 ஆம் தேதி சென்னை உயர் நீதிமன்றம் அவருக்கு ஜாமீன் வழங்கியது.

"இந்த வழக்கில் ஜாமீன் கிடைத்த பிறகும் கூட 300 நாட்களாக அவரால் வெளியில் வர முடியவில்லை" எனக் கூறுகிறார், அவரது வழக்கறிஞர் கே.ஆர்.ராஜா. ஜாமீன் நிபந்தனை களை நிறைவேற்ற முடியாதது தான் அதற்கான காரணம் என்று அவர் கூறினார்.

**ஜாமீன் நிபந்தனைகள் என்ன?**

"கடந்த 2013 ஆம் ஆண்டு முதல் அந்தப் பெண் சிறையில் இருந்தார். அவர் வெளியில் வருவதற்கு ஜாமீன் நிபந்தனையாக, ரத்த உறவுள்ள ஒருவரும் ரத்த உறவு அல்லாத ஒருவரும் உத்தரவாதம் (Surety) தர வேண்டும்; அடுத்து, 25 ஆயிரம் ரூபாய்க்கு பத்திரம் (Bond) சமர்ப்பிக்க வேண்டும்; ஜாமீன் உத்தரவாதம் தருபவர்களின் ஆதார் அட்டை, ரேஷன் அட்டை, வங்கிக் கணக்குப் புத்தகம் ஆகியவற்றை சமர்ப்பிக்க வேண்டும் என நீதிமன்றம் உத்தரவிட்டது. ஆனால், அது அவ்வளவு எளிதாக கிடைக்கவில்லை" என கூறினார் வழக்கறிஞர் கே.ஆர்.ராஜா.

சிறையில் 11 ஆண்டுகள் இருந்த போது அந்தப் பெண்ணை சந்திக்க அவரது உறவினர்கள் ஒருவர் கூட வரவில்லை. "குழந்தையைக் கொன்ற குற்றச் சாட்டு இருந்ததால் ஜாமீனுக்கு உத்தரவாதம் தரவும் அவர்கள் மறுத்துவிட்டனர்" என்கிறார் கே.ஆர்.ராஜா.

இதனால் ஜாமீன் கிடைத்தும் 300 நாட்களாக அந்தப் பெண், சிறையில் தவிப்பதாக, ஆங்கில நாளேடு ஒன்றில் கடந்த 13 ஆம் தேதி செய்தி வெளியானது.



**அரசு வழக்கறிஞர்களிடம் நீதிபதிகள் கேள்வி**

இதையடுத்து, வேலூர் சிறையில் ஜாமீன் கிடைத்தும் 300 நாட்களாக பெண் ஒருவர் தவிப்பது குறித்து தமிழ்நாடு அரசு வழக்கறிஞர்களிடம், சென்னை உயர் நீதிமன்றத்தில் நீதிபதிகள் எஸ்.எம்.சுப்ரமணியம், ஜோதிராமன் அமர்வு கேள்வி எழுப்பியது.

இதனால், பெண்ணின் உறவினர்களைத் தொடர்பு கொண்டு சிறைத்துறை அதிகாரிகள் பேசியதன் விளைவாக, ஜாமீனுக்கு உத்தரவாதம் தருவதற்கு பெண்ணின் சகோதரர் முன்வந்ததாக கூறுகிறார், வழக்கறிஞர் கே.ஆர்.ராஜா.

"சிறையில் இருந்து வெளியில் வந்த அந்தப் பெண், தற்போது சிவகங்கையில் உள்ள தனது சகோதரி வீட்டில் வசித்து வருகிறார்" என்கிறார் கே.ஆர்.ராஜா.

**நீதிபதிகள் கூறியது என்ன?**

சிவகங்கை பெண்ணைப் போல ஜாமீன் கிடைத்தும் வெளியில் வர முடியாத



கைதிகள் எத்தனை பேர் உள்ளனர் என்ற விவரத்தைத் தாக்கல் செய்யுமாறு நீதிபதிகள் எஸ்.எம்.சுப்ரமணியம், ஜோதிராமன் அமர்வு உத்தரவிட்டது.

இதற்கு தமிழ்நாடு சிறைத்துறை அளித்துள்ள பதிலில், தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு சிறைகளில் ஜாமீன் கிடைத்தும் அதற்கான நிபந்தனைகளை பூர்த்தி செய்ய முடியாமல் 175 பேர் தொடர்ந்து சிறையிலேயே இருப்பதாக தெரிவித்துள்ளது.

இதில் 153 விசாரணைக் கைதிகளும் 22 தண்டனை கைதிகளும் இருப்பதாக, சிறைத்துறைடி.ஜி.பி அளித்த அறிக்கையில் கூறப்பட்டிருந்தது.

“இது துரதிர்ஷ்டவசமானது” எனக் கூறிய நீதிபதிகள், நவம்பர் 18 அன்று இந்த வழக்கை தாமாக முன்வந்து விசாரணைக்கு எடுத்துக் கொள்வதாக தெரிவித்தனர்.

“சில வழக்குகளில் கீழமை நீதிமன்றங்கள் ஜாமீன் வழங்கினாலும் அவை கைதிகளின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்படுவதில்லை” எனக் கூறிய நீதிபதிகள், “ஏழைக் கைதிகளுக்கு ஜாமீன் உத்தரவாதங்களை நிறைவேற்றுவதற்கு தேவையான உதவிகள் தாமதமின்றி கிடைக்க வழிவகை வேண்டும்“ என்று அறிவுறுத்தினர்.

மாவட்ட முதன்மை நீதிபதிகள், சட்டப் பணிகள் ஆணையக் குழு மற்றும் சிறைத்துறை அதிகாரிகளுக்கு இடையே தகவல் பரிமாற்றம் இல்லாததே ஜாமீன் கிடைத்தும் கைதிகள் சிறையில் இருப்பதற்கு காரணமாக உள்ளதாகக் கூறிய நீதிபதிகள், “இதனை சரிசெய்வதற்கு இ-போர்ட்டல் உருவாக்க வேண்டும்“ என்று அரசுக்கு பரிந்துரைத்தனர்.

இந்த வழக்கில் பதில் அளிக்க ஏதுவாக, மாநில உள்துறை செயலர், டி.ஜி.பி, மாநில சட்டப்பணிகள் ஆணையக் குழு உறுப்பினர் ஆகியோரை வழக்கில் சேர்த்து நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

**“இந்தியா முழுக்க இந்த நிலைதான்” - வழக்கறிஞர் பா.புகழேந்தி**

ஜாமீன் கிடைத்தும் வெளியில் வர முடியாத நிலை என்பது இந்தியா முழுக்க உள்ள சிறைகளில் உள்ளதாக கூறுகிறார், சிறைக் கைதிகள் உரிமை மையத்தின் இயக்குநர் வழக்கறிஞர் பா.புகழேந்தி.

“ஒருவருக்கு ஜாமீன் கிடைத்தால் அவர் இரண்டு ஜாமீன்தாரர்களை (Surety) கொண்டு போய் நிறுத்தி வெளியில் வரலாம். அந்த ஜாமீன்தாரர்களிடம் சொத்து பத்திரம், வங்கிக் கணக்கு புத்தகம், வாகனத்தின் ஆர்.சி புத்தகம், சொத்து இருப்பதற்கான தாசில்தார் சான்று ஆகியவை கேட்கப்படுகிறது. இந்த நிபந்தனைகளை பூர்த்தி செய்ய முடியாத நிலையில் ஏராளமான கைதிகளின் குடும்பங்கள் தவிக்கின்றன. குடும்பத்தினரால் கைவிடப்பட்ட கைதிகளால் ஜாமீனில் வருவதை நினைத்துப் பார்க்கவே முடியாது” வழக்கறிஞர் பா.புகழேந்தி கூறுகிறார்.

**சிறைத்துறை தலைவரின் பதில்**

“ஜாமீன் பெறுவதற்கான நிபந்தனைகள் சட்டப்படியானவை. அவை பின்பற்றப்பட்டேயாக வேண்டும். சிறையில் இருந்து வெளியில் வருவதற்கு உத்தரவாதம் பெறாமல் ஜாமீன் கொடுத்தால் சில சிக்கல்கள் உள்ளன. அதன்பிறகு வழக்கை நடத்துவதற்கு அவர் வராமல் போய்விட்டால் என்ன செய்வது. எனவே, இந்த நிபந்தனைகள் அவசியமான ஒன்று.

ஜாமீன் கிடைத்து அதற்கு உத்தரவாதம் கொடுப்பதற்கு அவர்களின் உறவினர்கள் வர மறுப்பதால், அவர்களை வெளியில் கொண்டு வருவதற்கு ஏதாவது வாய்ப்புள்ளதா என்பதற்காக இந்த வழக்கு நீதிமன்றத்துக்குச் சென்றுள்ளது.

“ஜாமீன் பெறுவதற்கான நிபந்தனைகள் குறித்து நீதிமன்றம் தான் முடிவு செய்ய வேண்டும்“ என்கிறார் கனகராஜ். Source: www.bbc.com/tamil

- சரவணன் @ மணிகண்டன்




# அமரன்

சென்னையில் நடுத்தரக் குடும்பத்தில் பிறந்த முகுந்த் வரதராஜன் (சிவகார்த்திகேயன்) ராணுவத்தில் சேர விரும்புகிறார். அவருடைய அம்மா கீதாவுக்கு (கீதா கைலாசம்) அதில் விருப்பமில்லை. ஆனால் முகுந்துக்கு துணை நிற்கிறார், காதலி இந்து ரெபெக்கா (சாய் பல்லவி). ராணுவத்தில் சேர்ந்து காஷ்மீர் செல்லும் முகுந்த், கேப்டன், மேஜர் போன்ற உயர் பதவிகளை அடைகிறார். முகுந்துடனான காதலை இந்துவின் பெற்றோர் எதிர்க்க, அதைச் சமாளித்து அவர்களின் சம்மதத்துடன் திருமணம் செய்துகொள்கிறார். இவர்களுக்குப் பெண் குழந்தை பிறக்கிறது. ராஷ்ட்ரிய ரைஃபில்ஸ் 44 படைக்குத் தலைவராக நியமிக்கப்படும் முகுந்த், தெற்கு காஷ்மீரில் தீவிரவாதத்துக்கு எதிரான போரில் வீரமரணம் அடைவதுதான் படம்.

காஷ்மீரில் தீவிரவாதிகளுக்கு எதிரான போரில் உயிர்நீத்த மேஜர் முகுந்த் வரதராஜனின் வாழ்க்கை சம்பவங்களை வைத்து இந்தப் படத்தை இயக்கியிருக்கிறார் ராஜ்குமார் பெரியசாமி. அறியப்பட்ட சம்பவங்களை வைத்து படங்கள் எடுக்கப்படும்போது கதை தெரியும் என்பதால் இறுதிவரை சுவாரஸியத்தைத் தக்கவைப்பது மிகப் பெரிய சவால். அதை அநாயாசமாகக் கையாண்டிருக்கிறார் ராஜ்குமார் பெரியசாமி.

முகுந்தின் மனைவி இந்துவின் பார்வையில் சொல்லப்படும் கதையில் இருவருக்கும் இடையிலான காதலுக்கும் உணர்ச்சிகரப் பரிமாற்றங்களைச் சொல்லும் தருணங்களுக்கும் அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருக்கிறது. இந்தக் காட்சிகள் ஒவ்வொன்றும் ரசனையுடனும் மனதுக்கு நெருக்கமாகவும் இருக்கின்றன. அதே நேரம் ராணுவ வீரர்களின் ஒழுக்கம், தியாகம், அர்ப்பணிப்பு, போர்த்திறன், இழப்புகள் ஆகியவற்றைப் பார்வையாளர்களுக்கு நெருக்கமாகக் காட்டிப் புரிந்துகொள்ள வைக்கிறது படம்.

காஷ்மீர் எல்லையில் ராணுவம் எப்படி இயங்குகிறது, அங்கிருக்கும் சவால்கள், தீவிரவாதத்தால் காஷ்மீர் மக்களுக்கு ஏற்படும் பிரச்சினைகள் என செய்திகளாகக் கேட்டும் படித்தும் தெரிந்த விஷயங்களை அருகில் பார்த்த உணர்வைத் தருகிறது படம். காஷ்மீரில் விடுதலைக்காகப் போராடுவதாகக் கூறும் தீவிரவாதிகளை சிலர் ஆதரிப்பதைக் காட்சிப்படுத்தும் அதே வேளையில், பெரும்பாலான காஷ்மீரிகள் அமைதியை வலியுறுத்தி, ராணுவத்துக்குத் துணை நிற்பதையும் அழுத்தமாகச் சொல்லி இருப்பதற்கு இயக்குநரைப் பாராட்ட வேண்டும்.

முகுந்த் வரதராஜனின் பெற்றோருக்கும் அவர் மனைவி, மகளுக்கு இடையிலான அன்புப் பரிமாற்றங்களைப் பதிவு செய்யும் காட்சிகள் மனதுக்கு இதம் தருகின்றன. குறிப்பாக முகுந்துக்கும் இந்துவுக்குமானப் பிணைப்பைப் பார்வையாளர்களை உணர வைத்ததுதான் இந்தப் படத்தின் உயிர்நாடி.





ராணுவப் பணியில் சேர்வதற்காக முதல்முறையாக முகுந்த் ரயில் ஏறும்போது பெற்றோர், காதலி, சகோதரிகளிடம் விடைபெறும் காட்சியை யாராலும் கண்ணீரின்றி கடக்க முடியாது.

போர்க் காட்சிகள் பரபரப்பைக் கொடுத்தாலும் ஒரு கட்டத்துக்கு மேல் ஒரே மாதிரியாக இருப்பது போன்ற உணர்வு ஏற்படுவதைத் தவிர்க்க முடியவில்லை. இரண்டாம் பாதியில் படத்தின் நீளத்தைக் கொஞ்சம் குறைத்திருக்கலாம்.

சிவகார்த்திகேயனுக்கு இது வாழ்நாள் கதாபாத்திரம். மிடுக்கான தோற்றம், கச்சிதமான நடிப்பு, சண்டைக் காட்சிகளில் கடுமையான உழைப்பு என முகுந்த் வரதராஜனின் வீரத்தையும் தியாகத்தையும் உணர்த்துவதில் அபார வெற்றிபெற்றிருக்கிறார். சாய் பல்லவியின் அற்புதமான நடிப்பு, இந்தப் படத்தைத் தாங்கி நிற்கும் இன்னொரு தூண். புன்னகை, சிரிப்பு, அழுகை, வசன உச்சரிப்பு என ஒவ்வொரு உணர்விலும் உயிர்ப்பு மிளிர்கிறது. முகுந்தின் உயர் அதிகாரியாக ராகுல் போஸ், அம்மாவாக கீதா கைலாசம், விக்ரம் சிங்காக வரும் புவன் அரோரா என அனைத்துத் துணைக் கதாபாத்திரங்களும் மனதில் நிற்கின்றன.

ஜி.வி.பிரகாஷ் இசையில் 'ஹேய் மின்னலே' ரசிக்க வைக்கிறது. பின்னணி இசை, காட்சிகளுக்குத் துணை புரிந்துள்ளது. சாயின் ஒளிப்பதிவு கண்ணுக்கு இதமான உணர்வைத் தருகிறது. காஷ்மீரில் நிகழும் ஆக்ஷன் காட்சிகளில் அபாரமான உழைப்பைக் காண முடிகிறது.

நாட்டைப் பாதுகாக்கும் பணியில் உயிரைத் தியாகம் செய்த ஒரு ராணுவ மேஜரின் தியாகத்துக்கும் அதற்குத் துணை நின்ற குடும்பத்துக்கும் உரிய மரியாதை செலுத்தியிருக்கிறான் இந்த 'அமரன்'.

– P.கார்த்திகேயன்



# 'கருட சக்தி' என்ற கூட்டுப் பயிற்சிக்காக இந்திய ராணுவத்தின் சிறப்புப் படைப் பிரிவு இந்தோனேசியாவுக்கு புறப்பட்டது



இந்தியா-இந்தோனேசியா கூட்டு சிறப்புப் படைப் பயிற்சியின் 9-வது பதிப்பான கருட சக்தி 2024-ல் பங்கேற்பதற்காக 25 வீரர்களைக் கொண்ட இந்திய ராணுவப் படைப் பிரிவு இந்தோனேசியாவின் ஜகார்த்தாவில் உள்ள சிஜன்டுங்கிற்குப் புறப்பட்டது. இந்த பயிற்சி 2024 நவம்பர் 1 முதல் 12 வரை நடைபெறும்.

இந்திய படைப்பிரிவை பாராசூட் ரெஜிமென்ட் (சிறப்புப் படைகள்) வீரர்கள் இந்தியப் படையிலும் சிறப்புப் படை கோபாசஸ் சார்பில் 40 வீரர்கள் இந்தோனேசியா படையிலும் இடம் பெற்றுள்ளனர்.

இருதரப்பினரும் அவரவர் செயல்படுத்தும் நடைமுறைகளை அறிந்து கொள்வது, பரஸ்பர புரிதலை மேம்படுத்துவது, ஒத்துழைப்பு மற்றும் இரு ராணுவங்களின் சிறப்புப் படைகளுக்கு இடையே இயங்கும் தன்மை ஆகியவற்றை மேம்படுத்துவதே கருட சக்தி 2024 பயிற்சியின் நோக்கமாகும். இந்தப் பயிற்சி இருதரப்பு ராணுவ ஒத்துழைப்பை வளர்ப்பதற்கும், விவாதங்களை நடத்துவது மற்றும் ராணுவ பயிற்சிகளின் ஒத்திகை மூலம் இரு படைகளுக்கும் இடையிலான பிணைப்பை வலுப்படுத்துவது ஆகியவற்றைக் கொண்டிருக்கும்.

# பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கான 2030-க்கு முந்தைய குறிக்கோள்கள் குறித்த அமைச்சர்கள் அளவிலான வட்ட மேசை மாநாட்டில் உறுதியாக தலையிட்ட இந்தியா

அஜர்பைசான் நாட்டின் பாகு நகரில் நடைபெற்ற ஐநா பருவநிலை மாற்ற மாநாட்டில், இந்தியா முக்கியமான விவகாரம் குறித்து தலையிட்டது. பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்ளவதற்கான CoP 29 மாநாட்டில் தெரிவிக்கப்பட்ட முழுமையான தொகுப்பில், இந்தியாவின் எதிர்பார்ப்பு அடிப்படையில் இந்த தலையீடு மேற்கொள்ளப்பட்டது.

இந்த மாநாட்டில் பங்கேற்ற மத்திய சுற்றுச் சூழல் வனம் மற்றும் பருவநிலை மாற்றத்துறை செயலாளரும், இந்திய தூதுக்குழுவின் துணைத்தலைவருமான திருமதி லீனா நந்தன், 2024-ம் ஆண்டுக்கான தேசிய அளவில் தீர்மானிக்கப்பட்ட பங்களிப்புகளின் பகுப்பாய்வு அறிக்கை அடிப்படையில், 2020 முதல் 2030 வரையிலான காலகட்டத்தில் மொத்த கரியமில வாயு வெளியேற்றம் 86 சதவீதம் அதிகரிக்கக் கூடும் என்றார். எனவே, நமது விவாதங்கள் உறுதியான முடிவெடுக்கும் வகையில் அமைய வேண்டும் என்றார்.

2020-க்கு முந்தைய காலகட்டம் என்பது உலகளாவிய பருவநிலை மாற்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான அரிய வாய்ப்பு என்றும் அவர் குறிப்பிட்டார். கரியமில வாயு வெளியேற்றத்தைக் குறைக்க ஒப்புக் கொண்ட நாடுகள், உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேணடும் என்றும் இந்த மாநாட்டில் இந்தியா வலியுறுத்தியது. - R.ஹரிகிருஷ்ணன்



சிறப்பு நடவடிக்கைகளைத் திட்டமிடுதல் மற்றும் செயல்படுத்துதல், சிறப்புப் படைகளின் திறன்களை மேம்படுத்துவதற்கான நோக்குநிலை, ஆயுதங்கள், உபகரணங்கள், கண்டுபிடிப்புகள், நுட்பங்கள் மற்றும் நடைமுறைகள் பற்றிய தகவல்களைப் பகிர்ந்து கொள்ளுதல் ஆகியவை இந்தப் பயிற்சியில் அடங்கும். இந்தக் கூட்டுப் பயிற்சியான கருட சக்தி 2024, காட்டுப் பகுதிகளில் சிறப்புப் படை நடவடிக்கைகள், பயங்கரவாத முகாம்கள் மீதான தாக்குதல்கள் மற்றும் ராணுவ ஒத்துழைப்பை வளர்ப்பதற்காக இரு நாடுகளின் வாழ்க்கை முறை மற்றும் கலாச்சாரம் பற்றிய நுண்ணறிவைப் பெறுவது ஆகியவற்றை செயல்படுத்தும்.

இந்தப் பயிற்சி இரு தரப்பினருக்கும் தங்களின் பிணைப்பை வலுப்படுத்தவும், சிறந்த நடைமுறைகளைப் பகிர்ந்து கொள்ளவும் ஒரு வாய்ப்பை வழங்கும். பகிரப்பட்ட பாதுகாப்பு நோக்கங்களை அடைவதற்கும், இரு நட்பு நாடுகளுக்கு இடையே இருதரப்பு உறவுகளை வளர்ப்பதற்கும் இது ஒரு தளமாக செயல்படும்.

– சிவசங்கர்

# சபரிமலைக்கு செல்லும் பக்தர்களுக்கு ரூ.5 லட்சம் காப்பீடு! கேரள அரசு அறிவிப்பு!

சபரிமலைக்கு செல்லும் பக்தர்களுக்கு ரூ.5 லட்சம் காப்பீடு வழங்கும் திட்டத்தை கேரள அரசு அறிவித்துள்ளது.

சபரிமலை ஐயப்பன் கோவிலுக்கு ஆண்டுதோறும் நடைபெறும் மண்டல மற்றும் மகரவிளக்கு பூஜை சீசன் காலங்களில் லட்சக்கணக்கான பக்தர்கள் வருவார்கள். இந்த ஆண்டுக்கான மண்டல பூஜை டிசம்பர் 26-ந்தேதியும், மகர விளக்கு பூஜை வருகிற ஜனவரி மாதம் 14-ந்தேதியும் நடைபெற உள்ளது. இதற்கான முன்னேற்பாடு பணிகளை திருவிதாங்கூர் தேவசம்போர்டு மற்றும் கேரள மாநில அரசு மேற்கொண்டு வருகிறது. பக்தர்கள் கூட்ட நெரிசலில் சிக்காமல் சிரமமின்றி சபரிமலைக்கு வந்து செல்வதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகிறது.

ஆன்லைனில் முன்பதிவு செய்யும் பக்தர்கள் மட்டுமின்றி, முன்பதிவு செய்யாமல் வரக்கூடிய பக்தர்களும் சாமி தரிசனம் செய்வதற்கான ஏற்பாடுகளை தேவசம்போர்டு செய்து வருகிறது. அதற்கான பல்வேறு அறிவிப்புகள் தொடர்ந்து வெளியிடப்பட்டு வருகின்றன. இந்நிலையில், சபரிமலைக்கு செல்லும் பக்தர்களுக்கு ரூ.5 லட்சம் காப்பீடு வழங்கும் திட்டத்தை கேரள அரசு அறிவித்துள்ளது. தரிசனத்துக்காக வந்த இடத்தில் மரணமடையும் பக்தர்களின் குடும்பத்திற்கு தேவசம்போர்டில் இருந்து இத்தொகை வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

– பி.ஸ்டாலின்




இரண்டு கிராமங்களிடையே உள்ள உள்ளூர் பிரச்சனை காரணமாக, வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயத்துக்கு, நீர்வரத்து தடுக்கப் படுவதாக புகார் எழுந்துள்ளது.

செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் தாலு காவில், வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயம் அமைந்துள்ளது. இங்கு, 36 ஏக்கர் பரப்பளவில் உள்ள ஏரியை அடிப்படை ஆதாரமாக வைத்து, பறவைகள் சரணாலயம் அமைந்துள்ளது. வரலாற்று பாரம்பரிய சிறப்பு மிக்க இந்த சரணாலயம், வனத்துறையால் பராமரிக்கப்பட்டு வருகிறது. ஆண்டு தோறும், அக்டோபர் முதல் மார்ச் வரை, இங்கு வெளிநாட்டு, வெளி மாநில பறவைகள் வரும்.

குறிப்பாக, பல்வேறு நாடுகளில் இருந்து, 40 வகைகளை சேர்ந்த, 60,000 பறவைகள் இங்கு வந்து செல்வதாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. ஆனால், சில ஆண்டுகளாக, இந்த ஏரிக்கு நீர்வரத்து கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதால், பறவைகளின் எண்ணிக்கையும் வெகுவாக குறைந்துள்ளது.

**வீணாகும் நீர்**

குறிப்பாக, நீர்மட்டம் 16 அடிக்கு உயர்ந்து, சில மாதங்கள் நீடிக்கும்போது, நீர்க்கரம்பை மரங்களின் உச்சி கிளைகளில்தான், கூழைக்கடா பறவைகள் கூடுகட்டி குஞ்சு பொரிக்கும். இங்கு நீர்மட்டம், 12 அடிக்கு உயராத நிலையில், கூழைக்கடா உள்ளிட்ட பறவைகள் வேறு இடங்களுக்கு செல்வதாக, பறவைகள் ஆர்வலர்கள் கூறுகின்றனர். வளையபுத்தூர் ஏரிக்கும், மதுராந்தகம் ஏரிக்கும் நடுவில், வேடந்தாங்கல் ஏரி அமைந்துள்ளது. வளையபுத்தூர் ஏரியில் இருந்து, வேடந்தாங்கல் ஏரிக்கு தண்ணீர் வர வேண்டும்.

இது தொடர்பாக வனத்துறையினர் கூறியதாவது: உத்திரமேரூர் மருதம் காப்புக்காட்டில் இருந்து வரும் தண்ணீர், நெல்வாய் ஏரி, வெள்ளப்புதூர் ஏரி, சித்தூர் ஏரி, வளையபுத்தூர் ஏரிகளுக்கு செல்ல கால்வாய் அமைந்துள்ளது. சில ஆண்டுகளுக்கு முன் வனத்துறை முயற்சியால், வெள்ளப்புதூர் முதல் வேடந்தாங்கல் வரையிலான, 18 கி.மீ., கால்வாய் தூர்வாரப்பட்டது. இதனால், இந்த கால்வாய் அமைப்பில், தண்ணீர் செல்வதில் எந்த தடையும் இல்லை.

இதில், வளையபுத்தூர் ஏரியில் இருந்து, வேடந்தாங்கல் ஏரிக்கு வரும், 1.4 கி.மீ., கால்வாயும், தூர்வாரி சுத்தம் செய்யப்பட்டது. இருப்பினும், வளையபுத்தூர் ஏரியில் இருந்து உபரி நீரை வேடந்தாங்கலுக்கான கால்வாயில் திறந்து விடாமல், மதுராந்தகம் ஏரிக்கு செல்லும் கால்வாயில் மட்டும் திறக்கப்படுகிறது. பராமரிப்பு பணி காரணமாக, மதுராந்தகம் ஏரியில் நீர் இருப்பு வைக்கப்படுவதில்லை.

இதனால், வளையபுத்தூர் ஏரியில் இருந்து, மதுராந்தகம் ஏரிக்கு செல்லும் நீர், வீணாக கடலுக்குதான் செல்கிறது. அதேநேரம், வேடந்தாங்கலுக்கு போதிய நீர் வரத்து இல்லாத சூழல் நிலவுகிறது. வனத்துறையினர், நீர்வளத்துறையினர் நடவடிக்கை எடுத்தாலும், வளையபுத்தூர் கிராம மக்கள், வேடந்தாங்கலுக்கு நீர் செல்வதை தடுக்கின்றனர். பறவைகள் சரணாலயம் காரணமாக, வேடந்தாங்கலுக்கு சுற்றுலா பயணியர் வருகை அதிகரிக்கிறது.

இதனால், இந்த கிராம மக்களுக்கு வேலை வாய்ப்பு, வருவாய் கிடைக்கிறது. தண்ணீர் வழங்கும் எங்கள் கிராமத்துக்கு எந்த பயனும் கிடைக்கவில்லையே என்ற ஆதங்கத்தில், வளையபுத்தூர் கிராம மக்கள் தண்ணீரை தடுக்கின்றனர். இந்த விஷயத்தில், தமிழக அரசும், மாவட்ட நிர்வாகமும் தலையிட்டு, வளையபுத்தூர் மக்களை சமாதானப்படுத்தி, வேடந்தாங்கலுக்கு இயல்பான முறையில் நீர்வரத்தை உறுதிப்படுத்த வேண்டும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

– Ba.சரவணன்

# சமூக உள்ளடக்கம் மற்றும் பசி, வறுமைக்கு எதிரான போராட்டம் குறித்த ஜி-20 அமர்வில் பிரதமர் உரையாற்றினார்




'சமூக உள்ளடக்கம் மற்றும் பசி, வறுமைக்கு எதிரான போராட்டம்' என்ற தலைப்பில் ஜி 20 மாநாட்டின் தொடக்க அமர்வில் பிரதமர் திரு நரேந்திர மோடி உரையாற்றினார். இந்த உச்சிமாநாட்டிற்கு ஏற்பாடு செய்ததற்காகவும், சிறப்பான விருந்தோம்பலுக்காகவும் பிரேசில் அதிபர் மேதகு திரு. லூயிஸ் இனாசியோ லூலா டா சில்வாவுக்கு பிரதமர் நன்றி தெரிவித்தார். நிலையான வளர்ச்சி இலக்குகளை மையமாகக் கொண்ட பிரேசிலின் ஜி 20 செயல்திட்டத்தைப் பாராட்டிய அவர், இந்த அணுகுமுறை உலகளாவிய தெற்கின் கவலைகளை எடுத்துக்காட்டுகிறது என்றும் புதுதில்லி ஜி 20 உச்சிமாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட மக்களை மையமாகக் கொண்ட முடிவுகளை முன்னெடுத்துச் செல்கிறது என்றும் குறிப்பிட்டார். "ஒரே பூமி, ஒரே குடும்பம், ஒரே எதிர்காலம்" என்ற இந்திய ஜி20 தலைமைத்துவத்தின் அழைப்பு ரியோ உரையாடல்களில் தொடர்ந்து எதிரொலிக்கிறது என்பதை அவர் மேலும் அடிக்கோடிட்டுக் காட்டினார்.

பசி மற்றும் வறுமையை சமாளிக்க இந்தியா மேற்கொண்டுள்ள முன்முயற்சிகள் பற்றி பேசிய பிரதமர், கடந்த 10 ஆண்டுகளில் இந்தியா 250 மில்லியன் மக்களை வறுமையிலிருந்து மீட்டுள்ளது என்றும், நாட்டில் 800 மில்லியன் மக்களுக்கு இலவச உணவு தானியங்களை விநியோகித்து வருவதாகவும் குறிப்பிட்டார். பெண்கள் தலைமையிலான வளர்ச்சியை ஊக்குவிக்க இந்தியா எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து அவர் மேலும் விரிவாக எடுத்துரைத்தார்.

ஆப்பிரிக்காவிலும் பிற இடங்களிலும் உணவுப் பாதுகாப்பை வலுப்படுத்த இந்தியா மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளை பிரதமர் எடுத்துரைத்தார். இது தொடர்பாக, பசி மற்றும் வறுமைக்கு எதிரான உலகளாவிய கூட்டணியை நிறுவுவதற்கான பிரேசிலின் முன்முயற்சியை அவர் வரவேற்றார், தற்போதைய மோதல்களால் உருவாக்கப்பட்டுள்ள உணவு, எரிபொருள் மற்றும் உர நெருக்கடிகளால் உலகளாவிய தெற்கு கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது, எனவே அவர்களின் கவலைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்பதை பிரதமர் வலியுறுத்தினார்.

– சிவசங்கர்

# கள்ளக்குறிச்சி கள்ளச் சாராய வழக்கை சிபிஐ விசாரிக்க தமிழக அரசு



## ஒத்துழைக்க வேண்டும்: அண்ணாமலை

கள்ளக்குறிச்சி கள்ளச் சாராய வழக்கை சிபிஐ விசாரிக்க தமிழக அரசு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று பாஜக மாநில தலைவர் அண்ணாமலை வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டிருக்கும் எக்ஸ் பதிவில், "திமுக ஆட்சியின் நிர்வாகச் சீர்கேட்டால், கள்ளக்குறிச்சியில் 68 உயிர்கள் கள்ளச் சாராயத்துக்கு பலியான வழக்கு தொடர்பாக, தமிழக பாஜக உள்ளிட்ட எதிர்க்கட்சிகளும், சமூக ஆர்வலர்களும் தொடர்ந்த வழக்கில், மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றம், வழக்கை சிபிஐ விசாரணைக்கு மாற்றி உத்தரவிட்டுள்ளது.

திமுக அரசின் காவல் துறைக்குத் தெரியாமல் கள்ளச் சாராய விற்பனை நடந்திருக்க வாய்ப்பில்லை எனவும், மாவட்ட காவல் துறை, கள்ளச் சாராய விற்பனையைக் கண்டுகொள்ளாமல் இருந்ததால்தான், இந்தத் துயர சம்பவம் நிகழ்ந்திருப்பதாகவும், கள்ளச் சாராயம் தொடர்பாக, திமுக அரசுக்கு இது ஓர் எச்சரிக்கை மணி என்றும் மாண்புமிகு நீதிமன்றம் கண்டனம் தெரிவித்துள்ளது. கள்ளச் சாராய விற்பனையையும் கண்டு கொள்ளாமல், வழக்கு விசாரணையையும் மெத்தனப் பொக்கில் கையாண்டு, உண்மைக் குற்றவாளிகளைக் காப்பாற்றும் போக்கில் திமுக அரசு செயல்பட்டு வந்திருப்பது, மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றத்தின் கருத்துகள் மூலம் தெளிவாகத் தெரிகிறது.

திமுக அரசின் இந்த அதிகார துஷ்பிரயோகத்துக்குக் கொட்டு வைத்திருக்கும் மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றத்துக்கு, நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். 68 உயிர்கள் பலியானதை மூடி மறைத்து, வழக்கைத் திசைதிருப்ப முயன்ற திமுக அரசுக்கு வன்மையான கண்டனங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். மேல்முறையீடு என்ற பெயரில் மக்கள் வரிப்பணத்தை வீணடிக்காமல், கள்ளக்குறிச்சி கள்ளச் சாராய மரணங்கள் தொடர்பான வழக்கை, சிபிஐ விசாரிக்க ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் திமுக அரசை வலியுறுத்துகிறோம்" என தெரிவித்துள்ளார்.

- S.ஜெயராஜ்

# பாம்பு கடியா? இனி, அரசுக்கு தெரிவிக்க வேண்டும்..

# அறிவித்தது தமிழ்நாடு அரசு!

அனைத்து அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகள் பாம்பு கடி தொடர்பான சிகிச்சை விவரங்களை தமிழ்நாடு அரசுக்கு தெரிவிக்க வேண்டும் என அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில், "தமிழ்நாடு பொது சுகாதாரச் சட்டம் 1939-ன் கீழ், தமிழ்நாடு அரசு பாம்பு கடியை "அறிவிக்கை செய்யக் கூடிய நோயாக" தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது. சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறையால் நவம்பர் 4, 2024 அன்று அரசாணை வெளியிடப்பட்ட பிறகு, இதற்கான அறிவிப்பை 6 நவம்பர் 2024 அன்று தமிழ்நாடு அரசால் அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது. பாம்பு கடி விஷம் என்பது உயிருக்கு ஆபத்தான ஒரு தீவிர மருத்துவ நிலை. இது வெப்பமண்டல மற்றும் மிதவெப்ப மண்டல நாடுகளில் உள்ள கிராமப்புற மக்கள் அடிக்கடி எதிர்கொள்ளும் ஒரு தடுக்கக்கூடிய பொது சுகாதார நிலை. உலக சுகாதார அமைப்பு (WHO) பாம்பு கடியால் ஏற்படும் இறப்புகள் மற்றும் கட்டுப்படுத்துவதற்கான உலகளாவிய உத்தியை அறிமுகப்படுத்தியுள்ளது.

சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகத்தால் தொடங்கப் பட்ட பாம்புகடி விஷத்தைத் தடுக்கும் மற்றும் கட்டுப்படுத்துவதற்கான தேசிய செயல் திட்டம் (NAPSE) ஒரு சுகாதார அணுகுமுறை மூலம் 2030 ஆம் ஆண்டுக்குள் பாம்பு கடி இறப்புகளை பாதியாகக் குறைப்பதற்கான வரைபடத்தை உருவாக்கி உள்ளது. பாம்பு கடியால் அதிக பாதிப்பும் மற்றும் இறப்பும் ஏற்படுகிறது, விவசாயத் தொழிலாளர்கள், குழந்தைகள் மற்றும் பாம்புகள் அதிகம் உள்ள பகுதிகளில் வாழும் மக்கள் அதிகம் பாதிக்கப்படுகின்றனர். பாம்பு கடியை "அறிவிக்கை செய்யக் கூடிய நோயாக" மாற்றுவதன் மூலம், தரவு சேகரிப்பு, மருத்துவ உட்கட்டமைப்பு மற்றும் பாம்பு கடியால் இறப்பதைத் தடுப்பதற்கான விஷமுறிவு மருந்து வழங்குவதன் மூலம் சிகிச்சை மேம்படுத்தப்படும்.



ஒருங்கிணைந்த சுகாதார தகவல் தளம்-ஒருங்கிணைந்த நோய் கண்காணிப்பு திட்டத்தின் (IHIP- IDSP) கீழ் பாம்பு கடி மற்றும் பாம்பு கடியால் ஏற்படும் இறப்பு தொடர்பான அறிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளன. இதுவரை பாம்பு கடி மற்றும் பாம்பு கடியால் ஏற்படும் இறப்பின் எண்ணிக்கையிலும், IHIP - IDSP தரவுகளின் எண்ணிக்கையிலும் வேறுபாடு உள்ளது.

பாம்பு கடி பற்றிய அறிவிப்பு அனைத்து அரசு மருத்துவமனைகள் மற்றும் தனியார் மருத்துவமனைகள் அரசுக்குத் தரவைத் தெரிவிக்க வேண்டியது கட்டாயமாக்குகிறது. இது, தமிழ்நாட்டில் பாம்பு கடிக்கான விரிவான தடுப்பு மற்றும் சிகிச்சை உத்திகளுக்குப் பயன்படுத்தக்கூடிய சிறந்த தரவு சேகரிப்புக்கு வழிவகுக்கும்" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

- தமிழ் வீரன்

# மீண்டும் விரிவடைகிறது மாநகராட்சி எல்லை: 16 உள்ளாட்சி அமைப்புகள் இணைகிறது

தமிழகத்தில் சென்னைக்கு அடுத்து, முக்கிய மாநகராட்சிகளில் ஒன்றாக கோவை மாநகராட்சி உள்ளது. இது, 257.04 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்டதாக உள்ளது.

இம்மாநகராட்சியில் தற்போது 100 வார்டுகள் உள்ளன. இவை நிர்வாக வசதிக்காக 5 மண்டலங்களாக பிரிக்கப்பட்டுள்ளன. கடந்த 2006-2011 காலக்கட்டத்தில் கோவை மாநகராட்சியின் வார்டுகளின் எண்ணிக்கை 72 ஆக இருந்தது. தொடர்ந்து, 2011ம் ஆண்டு குறிச்சி, குனியமுத்தூர், கவுண்டம்பாளையம் ஆகிய 3 நகராட்சிகள், 7 பேரூராட்சிகள், 1 கிராம ஊராட்சி என 11 உள்ளாட்சி அமைப்புகள் இணைக்கப்பட்டன.

இதன்பிறகு, பழைய 72 வார்டுகள் ஒருங்கிணைக்கப் பட்டு, 60 வார்டுகளாக குறைக்கப்பட்டன. அத்துடன், புதிதாக இணைக்கப்பட்ட 11 உள்ளாட்சி அமைப்புகளின் வார்டுகளும் மறுசீரமைப்பு செய்யப்பட்டு, 40 வார்டுகளாக உருவாக்கப்பட்டன. ஆக மொத்தம் கோவை மாநகராட்சி வார்டுகளின் எண்ணிக்கை 72-ல் இருந்து 100 ஆக உயர்ந்தது. கோவை மாநகராட்சியின் எல்லை விரிவாக்கம் செய்யப்பட்டு 14 ஆண்டுகள் கடந்துவிட்ட பின்னர், மீண்டும் எல்லையை விரிவாக்கம் செய்ய, தமிழக அரசின் அறிவுறுத்தலின்பேரில், மாவட்ட நிர்வாகம் மற்றும் மாநகராட்சி நிர்வாகம் அதற்கான பணிகளை மேற்கொண்டுள்ளது.

மாநகராட்சி எல்லையை ஒட்டி 5 கிலோ மீட்டர் தூர சுற்றுப்புற பகுதிகளில் உள்ள உள்ளாட்சி அமைப்புகளை மாநகராட்சியுடன் இணைக்க முடிவு செய்யப்பட்டு, அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போதைய நிலையில், 1 நகராட்சி, 4 பேரூராட்சிகள், 11 ஊராட்சிகள் என மொத்தம் 16 உள்ளாட்சி அமைப்புகளை இணைத்து, கோவை மாநகராட்சி எல்லை விரிவாக்கம் செய்யப்பட உள்ளது. இதன்மூலம், மாநகராட்சியின் எல்லை 438.54 சதுர கிலோ மீட்டராக விரிவடையும்.

அதாவது, மதுக்கரை நகராட்சி, இருகூர், பேரூர், பள்ளபாளையம், வெள்ளலூர் ஆகிய 4 பேரூராட்சிகள், குருடம்பாளையம், சோமையம்பாளையம், பேரூர் செட்டிபாளையம், கீரணத்தம், நீலாம்பூர், மயிலம்பட்டி, பட்டணம், வெள்ளானைப்பட்டி, கள்ளிப்பாளையம், சின்னியம்பாளையம், சீரப்பாளையம் ஆகிய 11 கிராம ஊராட்சிகள் என மொத்தம் 16 உள்ளாட்சி அமைப்புகள்




மாநகராட்சியுடன் இணைகிறது. இதற்கான கருத்துரு தயாரிக்கப்பட்டு, தமிழக அரசின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

தமிழக அரசு ஒப்புதல் அளித்த பிறகு, மீண்டும் வார்டுகள் மறுசீரமைப்பு செய்யப்பட்டு, மாநகராட்சி வார்டுகளின் எண்ணிக்கை 100-ல் இருந்து 150 ஆக உயர வாய்ப்பு உள்ளது. அதேபோல், ஒவ்வொரு வார்டுகளின் எல்லையும் மேலும் விரிவடையும் வாய்ப்புகள் உள்ளன. வார்டுகளின் எண்ணிக்கை மற்றும் எல்லைகள் மறுவரையறை செய்த பின்னரே, அடுத்தக்கட்ட உள்ளாட்சி தேர்தலை எதிர்கொள்ள மாநகராட்சி நிர்வாகம் தயாராகி வருகிறது.

இதுபற்றி கோவை மாநகராட்சி கமிஷனர் சிவகுரு பிரபாகரன் கூறுகையில்,"கோவை மாநகராட்சியின் எல்லை விரிவாக்கம் தொடர்பான கருத்துரு தமிழக அரசின் பரிந்துரைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அரசின் ஒப்புதல் கிடைத்த பின்னரே, இதுதொடர்பான அடுத்தக்கட்ட நடவடிக்கை தீவிரமடையும்'' என்றார்.

### இணைப்பு எப்போது?

கோவை மாவட்டம் மொத்தம் 4,723 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்டதாக உள்ளது. கோவை மாவட்டத்தில் தற்போதுள்ள கிராம ஊராட்சிகளின் பதவிக்காலம் முடிந்தவுடன், கிராம ஊராட்சிகளை, மாநகராட்சியுடன் இணைக்க திட்டமிடப்பட்டுள்ளது. கிராம பஞ்சாயத்துகள் வரும் டிசம்பர் மாதம் காலாவதியானதும், இணைப்பு முன்மொழிவுகள் நிறைவேற்றப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. 2025ம் ஆண்டு ஜனவரிக்குள் இந்த விரிவாக்கத்திற்கான பணிகள் மொத்தமாக முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

– P.அசோக்குமார்,

# ஒரு கோடி பனை விதைகளை நடும் நிகழ்ச்சி

## வனத்துறை அமைச்சர் பொன்முடி துவக்கி வைத்தார்



தமிழக அரசு தமிழக முழுவதும் நீர்நிலைகளை பாதுகாப்பதற்காகவும் பசுமை தமிழகத்தை உருவாக்க வேண்டும் என்பதற்காக ஒரு கோடி பனை விதைகளை நீர்நிலைகளில் நட வேண்டும் என்ற திட்டத்தினை அமுல்படுத்தி அதனை வனத்துறை சார்பில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்ச்சியை வனத்துறை அமைச்சர் பொன்முடி விழுப்புரம் மாவட்டம் ஏனாதிமங்கலம் தென்பெண்ணை ஆற்றின் கரையோரமாக எல்லிஸ் சத்திரம் அணை அருகில் பனை விதைகளை நட்டு துவக்கி வைத்தார்.

கல்லூரி மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் பனை விதைகளை நட்டனர் மாவட்ட ஆட்சியர் சி பழனி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர் பொன்முடி......

தமிழகத்தில் ஒரு கோடி பனை விதைகளை நட வேண்டும் என்று இலக்கு நிர்ணயத்து வனத்துறை சார்பில் விழுப்புரம் மாவட்டத்தில் 6 லட்சம் பனை விதைகளை 13 ஒன்றிய பகுதிகளிலும் உள்ள நீர் நிலைகளான குளங்கள் ஏரிகள் ஆறுகள் ஆகிய பகுதிகளில் நடுவதற்கு



தன்னார்வலர்கள் மாணவர்கள் பொதுமக்கள் என பலரும் ஈடுபட்டுள்ளனர்.

இந்த பனை விதை நடும் நிகழ்ச்சி துவக்கப்பட்டுள்ளது தொடர்ந்து ஆறு லட்சம் பனை விதைகளும் விழுப்புரம் மாவட்டத்தில் நடப்படும் இதனை பாதுகாக்க வேண்டியது அப்பகுதி மக்களினுடைய பொறுப்பு என்று தெரிவித்தார்.

மேலும் அணைகளையும், கரைகளையும் பாதுகாப்பதற்கு பனைமரம் மிகவும் அவசியம் அனைத்து பொதுமக்களும் மரங்களை வளர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

- இளைய தர்ஷினி

# 'அ' பதிவேடு
# 'A' Register
# என்றால் என்ன?

நிலம் என்பது பெரும்பாலான மக்களுக்குச் சொந்தமான மிகவும் மதிப்புமிக்க சொத்துக்களில் ஒன்று எண்ணலாம். இது அந்தஸ்த்தின் குறியீடாகவும், மக்கள் தங்களின் அடுத்த தலைமுறைக்கு சேர்த்து வைக்க ஆசைப்படும் சொத்தாகவும் கருதப்படுகிறது.

எனவே, சொத்து வாங்கும் முன் ஆவணங் களைகவனத்தில்கொள்ளவேண்டியதுமிகமுக்கியமா னதாகும். அதுமட்டுமின்றி விற்கும் போதும் ஆவணத்தை சரி பார்ப்பது முக்கியமானதாகும்.

நில பரிவர்த்தனைக்கு மிக முக்கியமான 1.பட்டா, 2.சிட்டா, 3.அடங்கல் போன்றவற்றைப் போல் அ-பதிவேடும் மிக முக்கியமான ஒன்றாகும். இது கிராம கணக்கில் பெரும்பாலும் இடம் வாங்கும் பொழுது பழைய ஆவணங்களில் இருக்கும் பழைய சர்வே எண்ணை இந்த அ-பதிவேடுடன் ஒப்புமைபடுத்தி கொள்ள வேண்டும்.

அ-பதிவேடு பிழையை திருத்த முதலில் வட்டாட்சியரிடம் மனு செய்ய வேண்டும். வட்டாட்சியர் முடிவில் திருப்தி இல்லையெனில், வருவாய் கோட்டாட்சியரிடம் மேல் முறையீடு செய்ய முடியும். தமிழகத்தில் உள்ள பதிவேடானது 1980 முதல் 1987 வரை கிராம நிலங்களை நில அளவை செய்து புதிய சர்வே எண்கள் கொடுத்து உருவாக்கப்பட்டதாகும்.

அ-பதிவேட்டில் சர்வே செய்யப்பட்ட காலத்தில் நிலத்தை அனுபவித்த உரிமையாளர்கள் பெயர் காணப்படும்.

இதனால் தற்போதைய உரிமையாளர்களுக்கும், அ-பதிவேட்டில் இருக்கும் உரிமையாளர்களுக்கும் இடையே லிங்க் ஆவணங்கள் சரியாக உள்ளதா என்பதனை அறிந்து கொள்ள முடியும்.

இதனால் நிலம் தொடர்பான பல சட்டச் சிக்கல்களை தவிர்த்துக் கொள்ளலாம். நில அளவியல் துறை, நிலவரித்திட்டத் துறை சர்வேயைப் பொறுத்தவரை அரசு இரண்டு வகையாகப் பிரிக்கின்றது.

அதாவது நில அளவியல் துறை, நிலவரித்திட்டத் துறை என்பவையாகும். அளந்து தயாரிக்கப்படும் எல்லைகள், அளவு, அளவீடு இவையெல்லாம் ஒரு துறைக்குத் தனியாக கொடுத்துவிடுகின்றது. அதுவே நில அளவியல் துறை ஆகும்.

மேலும், கிராமத்தின் மூலத்தினைப் பற்றிய தகவல்களையும், அதன் ஆதியையும் சொல்ல ஒரு துறை ஒதுக்கப்பட்டிருக்கின்றது. அதுவே நிலவரித் திட்டத் துறை ஆகும்.

**அ பதிவேடு என்றால் என்ன**

அ-பதிவேட்டை ஆங்கிலத்தில் A-Register என்பார்கள். கிராமத்தைப் பற்றி அனைத்து பதிவுகளும் அ-பதிவேட்டில் இருக்கும். இதனை கிராமத்தின் சட்டப் புத்தகம் என்றும் கூறுவர்.

அதாவது ஒரு கிராமம் எப்போது எப்படி உருவானது என்பது பற்றிய முழு விவரங்களும் அடங்கி இருக்கும். இதன் மூலம் கிராமத்தின் முழு விவரங்களையும், தன்மைகளையும் தெரிந்து கொள்ளலாம். இது ஒரு நீண்ட கால பதிவேடு




ஆகும். எனவே இது ஆண்டுதோறுமோ அல்லது, அடிக்கடியோ மாற்றப்படுவதில்லை.

எனினும் பெரும்பாலும் கிராமத்தை ஒட்டுமொத்தமாக நில அளவை செய்து ரிசர்வ் செய்தார்கள் என்றால் மட்டும் அ-பதிவு திருத்தப்படும் அல்லது, மாற்றி அமைக்கப்படும்.

**அ பதிவேட்டில் உள்ளடங்குபவை**

அ-பதிவேடு என்பது வருவாய்த் துறையின் மிக முக்கியமான ஆவணமாகும். இப்பதிவேடு அச்சிடப்பட்டிருக்கும். இந்தப் பதிவேட்டில் வரிசை எண் கொடுக்கப்பட்டு 1.சர்வே எண், 2.நிலத்தின் உரிமையாளர் எண், 3.நிலத்தின் வகைப்பாடு 4.நஞ்சை, புஞ்சை, மானாவரி, 5.நில உரிமையாளர் பெயர், 6.பட்டா எண், 7.நிலத்தின் நீள அகலம், 8.ஹெக்டேர் போன்றவை குறிப்பிடப்பட்டிருக்கும்.

அது மட்டுமன்றி அந்நிலம் அரசிடமா அல்லது தனியாரிடமா உள்ளது என்பது பற்றியும் குறிப்பிடப்பட்டிருக்கும்.

– K.ரமேஷ்குமார்

# கத்தாரி ஊராட்சியில் சிறப்பு கிராம சபை கூட்டம் ஊராட்சி மன்ற தலைவர் தலைமையில் நடைபெற்றது





திருப்பத்தூர் மாவட்டம் கத்தாரி ஊராட்சி பள்ளத்தூர் கிராம ஊராட்சி சேவை மைய வளாகத்தில் நேற்று உள்ளாட்சி தினத்தை முன்னிட்டு கிராம சபை கூட்டம் ஊராட்சி மன்ற தலைவர் அனிதா மோகன் தலைமையில் நடைபெற்றது. ஒன்றிய கவுன்சிலர் சந்தேஷ், துணை தலைவர் மணிமேகலை வெங்கடேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்த கூட்டத்திற்கு சிறப்பு அழைப்பாளராக கவிதா, வட்டார வளர்ச்சி அலுவலர், கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். கிராம சபை கூட்டத்தில் இந்த ஊராட்சியில் சிறப்பாக பணியாற்றிய பம்ப் ஆப்பரேட்டர்கள், தூய்மை பணியாளர்களுக்கு ஊராட்சி மன்ற தலைவர் அவர்களுக்கு நினைவு பரிசுகளை வழங்கி, பாராட்டினார். சாலை வசதிகள் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதில் வார்டு உறுப்பினர்கள், ஊர் பொதுமக்கள், அனைத்து துறை அதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர். முடிவில் ஊராட்சி செயலாளர் தேவன் நன்றி கூறினார். – S.மோகன்

# தொப்புள் கொடி அறுத்த இர்பான்..
# வானுக்கும் பூமிக்கும் குதித்த மா.சு.!
# இப்போ என்னாச்சு?: எடப்பாடி கேள்வி

குழந்தையின் தொப்புள் கொடியை அறுத்த யூ டியூபர் மீது உரிய நடவடிக்கை எடுப்பேன்' என்று முதலில் வானத்துக்கும் பூமிக்கும் குதித்த மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர், அந்த நபர் வாரிசு அமைச்சர் உதயநிதியுடன் அமர்ந்து சாப்பிடும் காட்சிகள் சமூக வலைதளங்களில் வெளிவந்தவுடன் அப்படியே பம்மி பதுங்குவதும், இது கொலைக் குற்றமா?

என்று பத்திரிகையாளர்களிடமே கேள்வி கேட்பதும் பொதுமக்களிடையே பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது என கூறியுள்ளார் அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி..

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்," தமிழகத்தில் தற்போது நடைபெறும் நிர்வாகத் திறனற்ற திரு. ஸ்டாலினின் விடியா தி.மு.க. ஆட்சியில், மக்கள் நல்வாழ்வுத் துறை, மக்களின் உயிர் காக்கும் துறையா? அல்லது மக்களின் உயிரைப் பறிக்கும் துறையா? என்ற சந்தேகம் அப்பாவி மக்களின் மனதில் எழுந்துள்ளது.

அரசு மருத்துவமனைகளுக்குச் செல்லும் ஏழை, எளிய மற்றும் நடுத்தர மக்களுக்கு கடந்த 42 மாதகால திமுக ஆட்சியில் நடைபெறும் கொடுமைகள் கணக்கிலடங்கா!

கால்பந்து வீராங்கனைக்கு தவறான சிகிச்சை: சென்னை, வியாசர்பாடி கன்னிகாபுரத்தைச் சேர்ந்த கூலித் தொழிலாளி திரு. ரவி என்பவரின் 17 வயது மகளும், கால்பந்து வீராங்கனையுமான கல்லூரி மாணவி பிரியா, கால் தசைப் பிடிப்புக்காக பெரியார் நகர் மருத்துவமனைக்கு 2022-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் சிகிச்சைக்காக சென்ற போது, அரசு மருத்துவப் பணியாளர்களின் அலட்சியத்தாலும், கவனக் குறைவாலும் அவரது வலது காலை இழந்ததோடு, அவரது உயிரையும் பறிகொடுத்தது இன்னும் தமிழக மக்களின் மனதில்



இருந்து அகலவில்லை.

காவலர் மகளுக்கு தவறான சிகிச்சை: சென்னை, ஓட்டேரி காவல் நிலையத்தில் தலைமைக் காவலராக பணிபுரிந்த திரு. கோதண்டபாணி அவர்களின் 7 வயது பெண் குழந்தைக்கு எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனை மருத்துவர்கள் தவறான சிகிச்சை அளித்ததால், வலது கால் ஊனம் ஏற்பட்டதாகவும், பலமுறை புகார் அளித்தும் எந்தவித நடவடிக்கையும் எடுக்காததால், தலைமைச் செயலகத்தில் தனது மகளுடன் திடீரென சாலை மறியலில் ஈடுபட்ட அவலமும் நடந்தேறியது.

சளி தொல்லைக்கு நாய் கடி ஊசி: 2023-ஜூன் மாதம் கடலூர் மாவட்டம், கோதண்டராமபுரத்தைச் சேர்ந்த கூலித் தொழிலாளி திரு. கருணாகரன், சளி தொல்லையால் அவதியுற்ற தனது மகள் சாதனாவை கடலூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றுள்ளார். அங்கு, மருத்துவப் பணியாளர்களின் அலட்சியத்தால் சளிக்கு ஊசி போடுவதற்கு பதிலாக, இரண்டு முறை நாய் கடி ஊசி போட்ட அவலமும் நடந்தேறியது.

விளம்பர மோக மாரத்தான் ஓட்ட நிகழ்ச்சியில்



இளம் பொறியியல் மாணவர் உயிரிழந்த பரிதாபம்: இரத்த தானத்தின் அவசியத்தை வலியுறுத்த எத்தனையோ வழிமுறைகள் இருக்கையில், கடந்த ஆண்டு ஜூலை மாதம் இரத்த தானத்தின் அவசியத்தை வலியுறுத்த, விளம்பர மோகத்துடன் மதுரையில் 10 கி.மீ. தூரத்திற்கு குருதிதான விழிப்புணர்வு மாரத்தான்-ஐ விடியா திமுக ஆட்சியின் சுகாதாரத் துறை அமைச்சர் நடத்தியபோது, கண்டிப்பாக மாணவர்கள் இதில் கலந்துகொள்ள வேண்டும் என்று சுகாதாரத் துறை வற்புறுத்தியதாகவும், அதனால் மாரத்தான் ஓட்டத்தில் கலந்துகொண்ட மாணவர்களில், மதுரை தியாகராயர் பொறியியல் கல்லூரியில் படித்து வந்த கள்ளக்குறிச்சியைச் சேர்ந்த மாணவர் தினேஷ் மயங்கி விழுந்து 23.7.2023 அன்று உயிரிழந்த சம்பவம்.

14.11.2023 நாளிட்ட எனது அறிக்கையில், சென்னை மாநகர ஆணையாளர், அடிபட்ட தனது உதவியாளருக்கு (திரு. ராமன்) மருத்துவ சிகிச்சை அளிப்பதற்காக, 24 மணி நேரமும் செயல்பட வேண்டிய சென்னை மாநகராட்சி மருத்துவமனைக்குச் சென்றபோது, அங்கு ஒரு மருத்துவர்கூட இல்லாத நிலையில், தனியார் மருத்துவமனையில் தனது உதவியாளருக்கு மருத்துவம் பார்த்துள்ளார். மேலும், அவரை மேல்சிகிச்சைக்கு சென்னை ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனைக்கு அனுப்ப அவசரக் கட்டுப்பாட்டு அறை மூலம் ஆம்புலன்ஸை அழைத்தும், மிகுந்த காலதாமதத்திற்குப் பின்னரே ஆம்புலன்ஸ் வந்துள்ளது. தமிழகத்தில் அரசு மருத்துவமனைகளின் செயல்படாத தன்மைக்கு இது ஒரு சிறந்த உதாரணமாக உள்ளது. இந்த விடியா திமுக ஆட்சியில் பல ஆண்டுகளாக துறையின் உயர் அதிகாரியாக இருந்த அவரது உதவியாளருக்கே இந்த நிலைமை என்றால், சாதாரண மக்களின் நிலை என்ன?

அதே அறிக்கையில், புதுக்கோட்டை மாவட்டத்தில் பரம்பூர் அரசு மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு, சுகாதாரத் துறை முன்னாள் அமைச்சரும், கழக சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள் ஆய்வுக்காகச் சென்றபோது, அங்கு அரசு மருத்துவர்கள் இல்லாததால் விபத்தில் காயமடைந்த நோயாளி பலமணி நேரம் காயத்துடன் அவதியுற்றதையடுத்து, டாக்டர் விஜயபாஸ்கர், தான் ஒரு மருத்துவர் என்ற முறையில் விபத்தில் காயமடைந்தவருக்கு முதலுதவி அளித்து ஆம்புலன்ஸ் மூலம் அருகிலுள்ள அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்த நிகழ்வும் நடைபெற்றுள்ளது.

ராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த ஒன்றரை வயது பெண் குழந்தை இதய நோயால் பாதிக்கப்பட்டு சென்னை எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, பிறகு ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனையில் பெண் குழந்தையின் வலது கை நீக்கப்பட்டதுடன், உடல்நிலை மிகவும் கவலைக்கிடமாகி கடைசியில் தங்கள் குழந்தையை இழந்துவிட்டோம் என்று அந்தக் குழந்தையின் தாய் கண்ணீருடன் பேட்டி அளித்தது அனைத்து ஊடகங்களிலும் வெளிவந்துள்ளன.

மேலும், 2023 தீபாவளி அன்று சிவகங்கை அரசு மருத்துவமனையில் வெடி விபத்தில் காயமடைந்த சிறுவனுக்கு சிகிச்சை அளிக்க மருத்துவர்கள் இல்லாமல், மருத்துவப் பணியாளர்கள் சிகிச்சை அளித்த நிகழ்வும் ஊடகங்களில் வெளிவந்துள்ளது.

எல்லாவற்றிற்கும் மேலாக, ஒரிரு நாட்களுக்கு முன்பு அரசு மருத்துவமனையில் சிகிச்சை பலனளிக்காமல் இறந்த குழந்தையின் உடல் ஈவு இரக்கம் இல்லாமல் கட்டைப் பையில் வைத்துக் கொடுத்த அவலம் அரங்கேறியுள்ளது மிகவும்

கண்டிக்கத்தக்கது. இதற்கு முன்பு ஒருமுறை அட்டைப் பெட்டியில் வைத்து உயிரிழந்த பிஞ்சுக் குழந்தையின் உடல் கொடுக்கப்பட்டது. அப்போதே இதற்கு நான் கடும் கண்டனம் தெரி-வித்து இருந்தேன்.

கடந்த மாதம் அரியலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில், மருத்துவர்கள் தங்குவதற்கான விடுதியை பணிகள் முடிந்தும், பயன்பாட்டிற்கு திறந்து வைக்காத காரணத்தால், சென்ற மாதம் பணி முடித்து 30 கி.மீ. தூரமுள்ள தனது வீட்டில் ஓய்வெடுக்கச் சென்ற மருத்துவர் மனோரஞ்சிதன் சாலை விபத்தில் தனது இன்னு-யிரை இழந்துள்ளார். இதற்குக் காரணம் பணிகள் முடிந்தும், மருத்துவர்கள் தங்கும் விடுதியை இந்த அரசு திறக்காததே என்று மருத்துவர்கள் குற்றம் சாட்டுகின்றனர். இப்படி பல நிகழ்வுகளை அடுக்கிக்கொண்டே போகலாம்.

கடந்த வாரம் கிண்டி மருத்துவமனையில் நோயாளியின் உதவியாளர் மருத்துவரைத் தாக்கிய சம்பவமும், அதைத் தொடர்ந்து மருத்துவர்கள் மற்றும் அரசு மருத்துவர்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்கக் கோரி ஆர்ப்பாட்டமும் நடந்தேறியது. இந்நிலையில், அடுத்த நாள் சிகிச்சைக்கு வந்த (விக்னேஷ்) நோயாளிக்கு உரிய சிகிச்சை அளிக்காத காரணத்தால் அவர் உயிரிழந்த சோகமும், அதைத் தொடர்ந்து, பாதிப்படைந்த குடும்பத்தினரின் அழுகுரல் காண்போரை கண் கலங்க வைத்தது. மருத்துவர்களின் கோரிக்கையை காலத்தே பரிசீலித்திருந்தால், இந்த நோயாளியின் இறப்பை இந்த அரசு தடுத்திருக்க முடியும். மருத்துவர்கள் மீதான தாக்குதல் அடிக்கடி நிகழ்ந்து வரும் நிலையில், அவ்வப்போது மருத்துவர்கள் அரசிடம் எடுத்துக் கூறிய நிலையில், மீண்டும் மீண்டும் தாக்குதல் நடத்தப்படுவதால்தான் மருத்துவர்கள் பொங்கி எழுந்ததாகத் தெரிவிக்கின்றனர். எனவே, மருத்துவர்களின் பாதுகாப்புக்கு இந்த அரசு உரிய உத்தரவாதத்தை அளித்திருந்தால் இந்த உயிரிழப்பு ஏற்பட்டிருக்காது.

2021-ல் ஆட்சிப் பொறுப்பேற்றதில் இருந்து மருத்துவத் துறையில் தொடர்ந்து நடக்கும் பல விரும்பத் தகாத நிகழ்வுகளை எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் நான் அடிக்கடி இந்த அரசின் கவனத்திற்கு சுட்டிக்காட்டி வரும் நிலையில், அவைகளைத் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல், எனக்கு முரண்பாடான பதில்களை அளிப்பதிலேயே இந்தத் துறையை கவனிக்கும் மந்திரி மா. சுப்பிரமணியம் குறியாக இருந்து, திறமையற்ற முறையில் செயல்படுகிறாரே தவிர, மக்களின் உயிரைக் காக்கும் பணியில் அக்கறையின்றி இருப்பது வேதனையான ஒன்றாகும்.

சட்ட விரோதமாக செயல்பட்டு, ‘குழந்தையின் தொப்புள் கொடியை அறுத்த யூ டியூபர் மீது உரிய நடவடிக்கை எடுப்பேன்’ என்று முதலில் வானத்துக்கும் பூமிக்கும் குதித்த மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர், அந்த நபர் வாரிசு அமைச்சர் உதயநிதியுடன் அமர்ந்து சாப்பிடும் காட்சிகள் சமூக வலைதளங்களில் வெளிவந்தவுடன் அப்படியே பம்மி பதுங்குவதும், இது கொலைக் குற்றமா? என்று பத்திரிகையாளர்களிடமே கேள்வி கேட்பதும் பொதுமக்களிடையே பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. ஏற்கெனவே இந்த யூ டியூபர் இர்ஃபான், குழந்தையின் பாலினத்தை வெளிப்படுத்தியதற்கும் எந்தவிதமான நடவடிக்கையும் இந்த அரசு எடுக்கவில்லை என்பது புரியாத புதிர்.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் சாதனைத் துறையாக விளங்கிய மக்கள் நல்வாழ்வுத் துறை, திரு. ஸ்டாலினின் விடியா திமுக ஆட்சியில் சர்ச்சைக்குரிய துறையாக மாறி, நோயாளிகளின் உயிருடன் விளையாடுவது கடும் கண்டனத்திற்குரியது.

தவறிழைத்தவர்கள் சாமான்ய மக்களாக இருந்தால் அவர்களுக்கு சட்டத்தை தீவிரமாக கடைபிடிப்பதும், உச்ச குடும்பத்திற்கு நெருக்கமானவர்களாக இருந்தால் சட்டத்தை காற்றில் பறக்கவிடுவதுமாக, மக்களைக் காக்கும் மருத்துவத் துறையை சீரழித்து, முதலமைச்சரின் குடும்பத்துக்கு கொத்தடிமை வேலை பார்ப்பவர்கள் மட்டுமே மந்திரிகளாக செயல்படுவார்கள் என்று எழுதப்படாத விதி ஒன்றை பொம்மை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் உருவாக்கி செயல்படுவது சர்வாதிகாரத்தின் உச்சம்.

தமிழக மக்கள் பொறுமைசாலிகள் மட்டுமல்ல - திறமைசாலிகள்... நேரம் வரும் போது இந்த அராஜக ஆட்சியாளர்களை ஓட ஓட விரட்டி அடிக்கப்போவது திண்ணம்.” என கூறியுள்ளார்.

- வீ.அய்யனார்

# டிஜிட்டல் வாழ்நாள் சான்றிதழ் இயக்கம் 3.0-ன் 2-வது வார நிறைவில் 77 லட்சத்திற்கும் மேற்பட்ட ஓய்வூதியதாரர்கள் பயனடைந்தனர்




ஜீவன் பிரமான் என்பது ஓய்வூதியதாரர்களுக்கு டிஜிட்டல் அதிகாரமளித்தலுக்கான பிரதமர் திரு நரேந்திர மோடியின் தொலைநோக்கு பார்வையால் உருவான திட்டமாகும். ஓய்வூதியம் வழங்கும் வங்கிகள், ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதியதாரர்கள் நலத்துறை, பாதுகாப்பு கணக்குகள் கட்டுப்பாட்டு ஜெனரல், ரயில்வே அமைச்சகம், தொலைத் தொடர்புத் துறை, அஞ்சல் துறை, ஐஐபிபி, இந்திய தனித்துவ அடையாள ஆணையம் மற்றும் ஓய்வூதியதாரர்கள் நலச் சங்கங்கள் ஆகியவை ஓய்வூதியதாரர்களுக்கு டிஜிட்டல் அதிகாரமளித்தல் என்ற தொலைநோக்கு பார்வையை நனவாக்க அரசு அணுகுமுறையுடன் ஒருங்கிணைந்து பணியாற்றி வருகின்றனர்.

ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதியதாரர்கள் நலத்துறை 2024 நவம்பர் 6 அன்று புதுதில்லியில் உள்ள தேசிய ஊடக மையத்தில் ஓய்வூதியதாரர்களின் டிஜிட்டல் அதிகாரமளித்தலுக்காக நாடு தழுவிய டிஜிட்டல் வாழ்நாள் சான்றிதழ் இயக்கம் 3.0 ஐ அறிமுகப்படுத்தியது. டிஜிட்டல் வாழ்நாள் சான்றிதழ் இயக்கம் 3.0 நவம்பர் 1 முதல் 30 ஆம் தேதி வரை இந்தியாவின் 800 சிறு நகரங்கள்/ நகரங்களில் நடைபெறுகிறது. 2024 நவம்பர் 1 முதல் 17ஆம் தேதி வரை 800 நகரங்கள் / மாவட்டங்களில் 1575 முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. இதற்காக நாடு முழுவதும் 1.8 லட்சம் தபால்காரர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

இந்த இயக்கத்தில், ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதியதாரர்கள் நலத்துறை அனைத்து ஓய்வூதியதாரர்களிடையேயும் டிஜிட்டல் வாழ்நாள் சான்றிதழ்- முக அடையாள நுட்பம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்த அனைத்து முயற்சிகளையும் அலுவலகங்கள் மற்றும் அனைத்து வங்கிக் கிளைகள் / ஏடிஎம் மைங்களில் மேற்கொண்டு வருகிறது. அனைத்து வங்கிகளும் தங்கள் கிளைகளில் அர்ப்பணிப்புடன் பணியாற்றும் குழுவை உருவாக்கி, தேவையான செயலிகளை ஸ்மார்ட் போன்களில் பதிவிறக்கம் செய்து, ஓய்வூதியதாரர்கள் வாழ்நாள் சான்றிதழ்களை சமர்ப்பிப்பதற்கு இந்தத் தொழில்நுட்பத்தை பெருமளவில் பயன்படுத்துகின்றனர். முதுமை / நோய் / பலவீனம் காரணமாக ஓய்வூதியதாரர்கள் வங்கிக் கிளைகளுக்கு வர முடியாத நிலையில், வங்கி அதிகாரிகளும் சம்பந்தப்பட்டவர்களின் வீடுகள் / மருத்துவமனைகளுக்கே செல்கின்றனர்.

இந்த 3.0 இயக்கம் தொடங்கப்பட்ட 2- வது வாரத்தின் முடிவில் 77 லட்சத்திற்கும் அதிகமான டிஜிட்டல் வாழ்நாள் சான்றிதழ்கள் வெற்றிகரமாக உருவாக்கப்பட்டுள்ளன. இதில் 90 வயதுக்கு மேற்பட்ட சுமார் 1,77,153 ஓய்வூதியதாரர்கள் மற்றும் 80 - 90 வயதுக்குட்பட்ட 17,212 ஓய்வூதியதாரர்கள்தங்கள் வீடு / இருப்பிடம் / அலுவலகங்கள் / கிளைகளில் வழங்கப்பட்ட சேவைகள் மூலம் தங்கள் வாழ்நாள் சான்றிதழ்களை சமர்ப்பிக்க முடிந்தது.

– K.அழகர்சாமி

# வனத்துறையில் அவுட் சோர்சிங் முறையை அரசு கைவிட வேண்டும்!

# வேட்டைத் தடுப்பு காவலர்கள் கோரிக்கை!




வேட்டை தடுப்பு காவலர்கள் என்று அழைக்கப்படும் இவர்கள் தமிழக வனத்துறையில் முக்கிய பங்காற்றி வருகின்றனர், தமிழ்நாடு வனத்துறைக்கு ஏற்படும் ஊழியர் பற்றாகுறையை இவர்கள் மூலமே சமன் செய்யப்படுகிறது. தமிழ்நாடு வனத்துறையில் உள்ள அனைத்து வணச்சரகங்களிலும் தேவைக்கேற்ப தொகுப்பூதிய அடிபடையில் இவர்களை பணியமர்த்தி அந்தந்த மாவட்ட வன அலுவலர் மூலமாக ஒப்பந்த அடிப்படையில் ஊதியம் வழங்கப்படுகிறது.

இதுகுறித்து சத்தியமங்கலம் புலிகள் காப்பகத்தில் பணிபுரியும் வேட்டை தடுப்பு காவலர் மதன்குமார் கூறுகையில்:-

"இந்த வேட்டைத் தடுப்பு காவலர்கள் யானைகள் ஊருக்குள் புகாதபடி ரோந்துப் பணி, குற்றத்தடுப்பு, சாலையில் மரங்கள் அகற்றம் மற்றும் தமிழக வனப்பகுதிகளில் ரோந்து செல்வது, வனவிலங்கு வேட்டைகளை தடுப்பது, வனவிலங்குகளை பாதுகாத்தல் உள்ளிட்ட பணிகளில் ஈடுபடுத்தப் படுகின்றனர்".

"இவர்களில் பெரும்பாலானோர் பழங்குடி இனத்தைச் சார்ந்தவர்களாக உள்ளனர். வனத் துறையில் 10 ஆண்டுகளுக்கும் மேலாக வேட்டைத் தடுப்பு காவலர்களாக பணிபுரிந்தவர்களை பணிவரன் முறை செய்து, அரசு நடவடிக்கை மேற்கொண்ட நிலையில், தற்போது வேட்டைத் தடுப்புக் காவலர் களை வெளி முகமை முறையில் (அவுட்சோர்சிங்) பணியமர்த்தும் நடவடிக்கைகளில் அரசு ஈடுபட்டுள்ளதாக தெரிகிறது".

"இவர்கள் வெளி முகமைக்கு மாற்றாமல், தொடர்ந்து தொகுப்பூதியத்திலேயே பணிபுரிய வாய்ப்பு அளிக்க வேண்டும் என வலியுறுத்தி வருகின்றனர். நாங்கள் வனப்பகுதியில் இரவு பகலாக பணியாற்றி வருகிறோம். வனவிலங்குகளை பாதுகாப்பதில் முன்களப் பணியாளர்களாகவும், வனத்துறைக்கு அரணாகவும் இருந்து வருகிறோம்".

"வனவிலங்குகள் தாக்குதலில் வேட்டைத் தடுப்பு காவலர்கள் அதிகமாக பாதிக்கப் பட்டுள்ளோம். 10 ஆண்டுகளுக்கு மேலாக வேட்டைத் தடுப்பு காவலராக பணியாற்றிய நிலையில் உயிரிழந்துள்ளார். அவருக்கு வனத்துறை சார்பில் எந்தவொரு நிவாரணமும் வழங்கப்படவில்லை" என்றார்.

மேலும் பேசிய அவர், "பணிவரன்முறையில் ஊதியம் கிடைக்கும் என எதிர்பார்த்து வேலை



செய்து வந்தனர். அண்மைக் காலமாக 10 ஆண்டுகளுக்கு மேல் வேட்டைத் தடுப்பு காவலர்களாக பணிபுரிந்தவர்களை வனத்துறை பணியாளர்களாக அரசு பணிவரன்முறை செய்தது. ஆனால், தற்போது அவுட் சோர்சிங் முறையில் மாற்றப்பட உள்ளதாக வனத்துறை தரப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது”.

“அப்படி மாற்றப்பட்டால் பணி பாதுகாப்பு இல்லாமலும், வனப்பகுதியில் ஏதாவது அசம்பாவிதம் நிகழ்ந்தால் அரசு சார்பில் கிடைக்கும் நிதி உதவிகள் இல்லாமல் போய்விடும். ஆகவே, அவுட் சோர்சிங் முறையை கைவிட்டு பழைய நடைமுறையான தொகுப்பூதிய அடிப்படையிலேயே பணிபுரிய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என வேட்டைத் தடுப்பு காவலர்கள் வலியுறுத்தியுள்ளோம்”.

“வனத்தையும், வனவிலங்குகளையும் பாதுகாக்கும் எங்களுக்கு பணி பாதுகாப்பு இல்லை என்ற கவலை உள்ளது. இதற்கிடையே, தமிழக அரசு வேட்டைத் தடுப்பு காவலர்களின் கோரிக்கையை கனிவுடன் பரிசீலனை செய்ய வேண்டும் என தமிழக அரசுக்கு கடந்த அக்.22ஆம் தேதி மனு அளிக்கப்பட்டது” என்றார்.

மேலும், இது குறித்து சத்தியமங்கலம் புலிகள் காப்பகத்தின் கள இணை இயக்குனர் குலால் யோகேஷ் விலாஷிடம் கேட்டபோது, “தமிழகத்தில் உள்ள 5 புலிகள் காப்பகத்திலும் அவுட் சோர்சிங் முறை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. பணி பாதுகாப்புக்காக காப்பீடு உள்ளிட்ட பல்வேறு வசதிகள் செய்யப்படுவதும், அவர்கள் தொடர்ந்து வனத்துறையிலேயே பணியாற்றுவார்கள்” என்றார்.

- B.நவின்குமார்


## Advertisement Tariff

| | | |
|---|---|---|
| Full Page Color Back Wrapper | : | ₹ 15,000/- |
| Full Page Color Inner Wrapper | : | ₹ 12,000/- |
| Half Page Color Wrapper | : | ₹ 8,000/- |
| Full Page Black & White | : | ₹ 8,000/- |
| Half Page Black & White | : | ₹ 5,000/- |
| **Annual Subscription** | : | ₹ 240/- |

Administrative Office:

**PENA KURAL**
3/885, Pillaiyar Kovil Street, Mettukuppam,
OMR, Chennai, Tamil Nadu, India - 600097.
Ph: 044-35906002, 9962245338
Email: info@penakural.com, Web: www.penakural.com

UPI Number:
8754582123

# புதிய குடும்ப அட்டை கேட்டு செய்த விண்ணப்பத்தின் மீது நிலை அறிய த.அ.உ.ச மூலம் மனு

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 6(1) இன் கீழ் விண்னப்பம் பதிவு தபால் ஒப்புகை அட்டையுடன்

தேதி:

விடுநர்: ..........

பெறுநர்: ...........

பொது தகவல் அலுவலர்,
தகவல் அறியும் உரிமைச் சட்டம் - 2005,
வட்ட வழங்கல் அலுவலர்,
_______வட்டம், _______மாவட்டம்

ஐயா,

பொருள் : புதிய குடும்ப அட்டை கேட்ட எனது விண்ணப்ப தேதி: ___ அதற்கான மனு எண் : ____

புதிய குடும்ப அட்டை கேட்டு நான் செய்த விண்ணப்பத்தின் மீது நாளது வரை எனக்கு வழங்கிடவில்லை. இதைப் பற்றியும் இப்பொருள் மீது தங்கள் அலுவலகத்தில் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் பற்றியும் அறிய தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005 - இன் கீழ் தகவல்கள் அளிக்க வேண்டுகிறேன்.

1) மேற்காணும் எனது விண்ணப்பத்திற்கு எண் அளிக்கப்பட்ட பகிர்மானப் பதிவேட்டின்; பதிவு செய்யப்பட்ட தன்பதிவேட்டின்; பதிவு அஞ்சல் பதிவேட்டின் சிறப்புப்பதிவேட்டின்; சம்பந்தப்பட்ட பக்கத்தின் ஒளிநகல்.

2) மேற்காணும் எனது விண்ணப்பத்தின் மீது எந்த அலுவலர் என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனும் நடைமுறைகளைக் காட்டும் ஆணையின் ஒளிநகல்.

3) மேற்காணும் எனது விண்ணப்பத்தின் மீது விசாரணை செய்த அலுவலர்கள் பெயர் பதவி அலுவலக விலாசம் விசாரணை செய்த தேதி ஆகியத் தகவல்களையும் அவர்களின் நாட்குறிப்பின் அந்த நாட்களின் ஒளிநகல்.

4) புதிய குடும்ப அட்டை கேட்டு விண்ணப்பித்து எத்தனை நாட்களுக்குள் அளிக்க வேண்டும், அளிப்பத்தை எந்த காரணங்களால் நிறுத்தி வைக்கலாம், நிராகரிக்கலாம்; என்று கூறும் அரசு ஆணைகளின் ஒளிநகல்

5) மேற்காணும் எனது விண்ணப்பத்தினைக் கையாண்ட தங்கள் அலுவலகக் கோப்பின் அனைத்துப் பக்கங்களின் ஒளிநகலையும் அலுவலகக் குறிப்புக்கட்டுடன் வருவாய் ஆய்வாளரின் தனிபதி வேட்டில் சிறப்பு பதிவேட்டில் எனது விண்ணப்பம் பதியப்பட்டுள்ள பக்கத்தின் ஒளிநகல்.

6) நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் எனக்கு குடும்ப அட்டை அளிக்காமல் இன்று வரை கால தாமதம் செய்யும் அலுவலரின் பெயர், பதவி, விலாசம், அதற்கு பதிவு செய்யப்பட்டுள்ளக் காரணம் ஆகியத் தகவல்களை தாங்கிய ஆவண நகல்.

7) நான் கோரிய புதிய குடும்ப அட்டை எனக்கு அளிப்பதற்கு தங்கள் அலுவலகத்திற்குத் தடையாக உள்ள காரணங்கள் அதை நியாயப்படுத்தும் அரசு ஆணைகளின் ஒளிநகல்.

8) குடும்ப அட்டை விண்ணப்பங்களை அலுவல கத்தில் கிடைக்கப்பெற்ற எத்தனை தினங்களுக்குள் இறுதி ஆணை பிறப்பிக்க வேண்டும் என காலக்கெடு நிர்ணயிக்கப்பட்ட சுற்றறிக்கையின் ஒளி நகல்

9) 1.1.2013 முதல் 30.11.2014 வரையிலான தங்கள் அலுவலக “புதிய குடும்ப அட்டை வழங்கல் பதிவேட்டின்” ஒளி நகல்

10) மாவட்ட, கோட்ட, வட்ட, மண்டல துணை வட்ட ஆட்சியர் மற்றும் பிர்க்க வருவாய் அலுவலர்களின் செல்பேசி மற்றும் முகவரிகளை வழங்கவும்

குறிப்பு: தகவல் அறியும் உரிமைச் சட்ட பிரிவு 4 இன் படி மாவட்ட நிர்வாகத்தால் ஒவ்வொரு துறை பொது தகவல் அலுவலர்கள் விவரங்கள் அவர்களின் முகவரிகள், எந்த தகவல்களுக்கு யாரிடம் விண்ணப் பிக்க வேண்டும் போன்ற தகவல்கள் தங்கள் மாவட்ட இணையதளத்தில் வெளியிடப்படாத காரணத்தால் உரிய பொது தகவல் அலுவலர் முகவரி தெரியாத காரணத்தாலும் தங்களுக்கு இந்த மனுவை அனுப்புவதோடு சட்ட பிரிவு 6(3) இன் படி நடவடிக்கை வேண்டுகிறேன்.

இந்த விண்ணப்பத்திற்கான கட்டணமாக ரூ.10 க்கான நீதிமன்ற கட்டண வில்லை ஒட்டப்பட்டுள்ளது என்றும் கனிவுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இணைப்புகள்:

1) எனது புதிய குடும்ப அட்டை மனு
2) புதிய குடும்ப அட்டை கேட்டும் விண்ணப்பித்த மனுவின் ஒப்புகைச் சீட்டு
3) எனது நீக்கல் சான்று நகல்

தங்கள் உண்மையுள்ள,

- D.பாமா


Subzero Cool Tech
AC REPAIR
SERVICE
&
RENT
AT YOUR DOOR STEP
AC REPAIR
INSTALLATION
MAINTENANCE
AMC SERVICE
We Repair all Brands
Uninstallation
Gas Filling
Air Duct Cleaning
HIGH QUALITY
PREMIUM
OPERATIONAL
SERVICE
CONTACT US
Address:
3/885, Pillaiyar Kovil Street,
Mettukuppam, OMR,
Opp to Bajanai Kovil,
Chennai - 600097.
SARAVNAN
9884555002
Email: saravnan1290@gmail.com

**PENA KURAL,** Tamil Monthly - November 2024
Registered with the Registrar of Newspapers for India Under No.: **TNTAM/2022/85375**

Owned, Printed and Published by: **NV SIVASHANKAR** | Printed at: **J.M.PROCESS, No.29, V.N.Dass Road, Border Thottam, Mount Road, Chennai - 600002.** | Published at: **No.7/13, 2nd Floor, Ponmanachemmal Street, MGR Nagar, Chennai - 600078.** | Editor: **RATHIKA S**

